# ஸ்ரீலங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனம

## வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்

## 2016

ஸ்ரீலங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனம்
த..பெட்டி-1382,
27, வொக்சோல் வீதி,
கொழும்பு-02.

20.07.2018

செயலாளர்,
கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு,
73/1,காலி வீதி,
கொழும்பு-03.

கனம் ஐயா,

**ஸ்ரீலங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனம்**
**2016 ம் ஆண்டுக்கான நிதியியல் அறிக்கை**

1957 ம் ஆண்டின் 49 ம் இலக்க சட்டத்தின் பந்தி 30 (1) நிபந்தனைக்கு அமைய, நான் 2016 ஆண்டிற்கான அறிக்கையை கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை சார்பில் பின்வரும் ஆவணங்களை சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

அ). 2016 ம் ஆண்டிற்கான நிதியியல் அறிக்கை
ஆ). கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை மற்றும்
இ). சபையின் அவதானிப்பு மேலே காட்டப்பட்ட (ஆ)

தங்கள் உண்மையுள்ள,

ஸ்ரீலங்கா சீமெந்துக் கூட:டுத்தாபனத்தின்
பணிப்பாள் சபை சார்பாக

***கையொப்பம்,***
**திரு.றியாட்சாலி,**
**தலைவர்**

# ஸ்ரீலங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனம்

**பொருளடக்கம்** **பக்க இல.**


| | | |
|---|---|---|
| 01 | பணிப்பாளர் சபையின் அறிக்கை | 01 – 04 |
| 02 | கூட்டுத் தகவல்கள் | 05 – 06 |
| 03 | மனித வளங்கள் | 07 |
| 04 | தலைவரின் அறிக்கை | 08 |
| 05 | கடந்த ஐந்து வருடங்களின் நிதியியல் நிலமைகளின் அறிக்கை | 09 |
| 06 | கடந்த ஐந்து வருடங்களின் பரந்த வருமானம் | 10 |
| 07 | கணக்காய்வுக் குழுவின் அறிக்கை – 2016 | 11 |
| 08 | கணக்காய்வாளர் அதிபதி திணைக்களத்தின் அறிக்கை – 2016 | 12 – 28 |
| 09 | 31 டிசெம்பர் 2016 ஒன்றிணைக்கப்பட்ட நிதியியல் நிலமைகளின் அறிக்கை | 29 |
| 10 | 2016 ம் ஆண்டுக்குரிய ஒன்றிணைக்கப்பட்ட பரந்த வருமான அறிக்கை | 30 |
| 11 | 2016 டிசெம்பர் 31 ம்திகதியன்று ஒன்றிணைக்கப்ட்ட நேர்மையான மாற்றங்களுக்கான அறிக்கை | 31 |
| 12 | 2016 ம் ஆண்டுக்கான ஒன்றிணைக்கப்பட்ட காசுப் பாய்ச்சல் அறிக்கை | 32 |
| 13 | ஒன்றிணைக்கப்பட்ட நிதியியல் அறிக்கைக் குறிப்புக்கள் –2016 | 33 – 42 |
| 14 | ஒன்றிணைக்கப்பட்ட நிதியியல் அறிக்கை –2016 இன் முழுமையான அறிக்கை. | 43 – 45 |
| 15 | கணக்கிடப்பட்ட வருமான வரி –2016 | 46 – 47 |
| 16 | கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை– 2016க் கான பணிப்பாளர் சபையின் அபிப்பிராய அறிக்கை | 48 – 53 |

# ஸ்ரீலங்கா சீமெந்து கூட்டுத்தாபனம்

**2016 ம் ஆண்டின் பணிப்பாளர் சபையின் அறிக்கை**

## 1.0 பின்னணி

1950 ம் ஆண்டின் கைத்தொழில் திணைக்களத்தின் கீழ் சீமெந்துத் தொழிற்சாலை காங்கேசன்துறையில் தாபிக்கப்பட்டு,1955 ம் ஆண்டின் 19 ம் இலக்க கூட்டுத்தாபனச் சட்டத்திற்கு அமைய பொதுக் கூட்டுத்தாபனமாக அரசாங்கத்தால் முழுமையான ஒதுக்கத்துடன் காங்கேசன் சீமெந் வேக்ஸ் எனப் பெயரிடப்பட்டது. 1956 ம் ஆண்டு காங்கேசன் சீமெந்து வேலைகள் ஆரம்பிக்கப்பட்டது.

1957 ம் ஆண்டின் 49 ம் இலக்க கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் 1959 ம் ஆண்டு ஜனவறி 1ம் திகதி இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனமாக மீளமைக்கப்பட்டது.

1980 ம் ஆண்டு வர்த்தமாணி அறிவித்தல் மூலம் ‘‘ஸ்ரீலங்கா சீமெந்து கூட்டுத்தாபனம்’’ என பெயர் மாற்றப்பட்டது. இக் கூட்டுத்தாபனமானது கைத்தொழில் மற்றும் விஞ்ஞானதுறை அமைச்சின் கீழ் செயல்பட்டு வந்ததை 1985 ம் ஆண்டு பெப்பிரவரி 1 ம் திகதி வீடமைப்பு நிர்மாணத்துறை உள்நாட்டு அரசாங்கத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. அதன் பிற்பாடு 1997 ம் ஆண்டு யூன் 19 ம் திகதி மீளவும் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டு தொடர்ந்தும் அதன் கீழ் இயங்கி வந்த பொழுதும் 2010 வரை அதன் கீழ் தொடர்ந்தும் அரச வளங்கள் மற்றும் அபிவிருத்தி முயற்சிகள் அமைச்சின் கீழ் 2015 பெப்பிரவரி வரை அதன் பிற்பாடு, ஸ்ரீலங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனம் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் கீழ் தொழிற்படுகிறது.

## 2.0 பார்வை மற்றும் குறிக்கோள் அறிக்கை

### பார்வை

ஸ்ரீலங்காவிற்குள் சீமெந்துக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு வழிகாட்டுதலையும் தலைமைத்துவத்தையும் வழங்குதல்.

### குறிக்கோள்

நாட்டிற்குத் தேவையான தரமான போதுமான சீமெந்து வினியோகம் மற்றும் ஏனைய சீமெந்தை அடிப்படையாக கொண்ட உற்பத்திகளை உறுதிப்படுத்துதல்.

### பிரதான விடயங்கள்

காங்கேசன் சீமெந்து வேலையை மீளவும் இயங்கச் செய்வதே கூட்டுத்தாபனத்தின் பிரதானமான பொறுப்பாகும். இது தொடர்பாக பல சந்தர்ப்பங்களில் மீளவும் உற்பத்திகளை தொடர்வதற்கான சாதகமான நடவடிக்கைகளை வருடங்களுக்க மேலாக பரந்தளவில் மேற்கோண்டோம். சம்பந்தப்பட்ட அதிகாரசபைகளுக்கு மற்றும் பாதுகாப்பு விடுவிப்பிற்கான சாதகமான சமாதான முன்னேற்றங்களுக்கு தேவையான அறிக்கைகளை அனுப்பியுள்ளோம்.
மற்றும் எங்களிடம் உள்ள கொள்ளுப்பிட்டி,மன்னார்,பாலாவி மற்றும் அறுவாக்காடு நிலங்களில் அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ள உள்ளோம்.

### பிரதான நடவடிக்கைகள்

1959 ம் ஆண்டு ஜனவறி 2 ம் திகதி மேலதிகமாக பிரசுரிக்கப்பட்ட வர்த்தமாணி இல.11634 குறிப்பிடப்பட்ட கூட்டுத்தாபன நடவடிக்கை விடயங்களின் கட்டளைகள் வருமாறு.

- சீமெந்து உற்பத்தி மற்றும் விற்பனை.
- தொலைபேசி மற்றும் தொலைக் கம்பங்கள்,தொலைபேசி பூத்(பெட்டி) நீர்காவிச் செல்லும் சாதனங்கள்,கியூபைப் மற்றும் ரையில்ஸ் அடங்கலாக சீமெந்து கொங்கிறீற்றினால் மேற்கொள்ளப்பட் பொருட்களை உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை செய்தல்.
- எந்த மனிதனுக்கும் மொத்தமாக மின்சார சக்தியை வழங்குதல்

1964 ம் ஆண்டு மே 11 ம் திகதி மேலதிக வர்த்தகமானி இல.14033 ஆல் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க கட்டளையின் கூடிய அங்கீகாரம் 1959 ம் ஆண்டு ஜனவரி 2ம் திகதி மேலதிகமாக பிரசுரிக்கப்பட்ட வர்த்மாணி இல. 11634 இன் முதலாவது அட்டவணையின் பிரகாரம் பந்தி 1இல் ‘‘சீமெந்து உற்பத்தி மற்றும் விற்பனை’’ சொல் ஒன்றுக்குப் இன்னொன்றால் அடக்கப்படுகிறது

கூட்டுத்தாபனம் 1981 ஆம் ஆண்டில் ரூபா.1,083,618,910 யை லங்கா சீமெந்து லிமிட்டெட்டில் பங்கு மூலதனத்தில் முதலிட்டதில் 62.45 % கொண்டுள்ளது. இந்த ஒரு பங்கின் பெறுமதி ரூபா. 10/=.எப்படியிருந்த பொழுதும் 2009 மற்றும் 2010 ம் ஆண்டில் பங்கின் பெறுமதி வடக்கில் ஏற்பட்ட யுத்த முடிவின் காரணமாக அதிகரிப்பு ஏற்பட்டது. பங்கின் சந்தைப் பெறுமதி ரூபா.34.75 வரை அதிகரித்ததுடன் 2011 ம் ஆண்டு சந்தைப் பெறுமதி ரூபா.26.20 ஆக குறைந்தது. 2015 ம் ஆண்டு டிசெம்பர் சந்தைப் பெறுமதி ரூபா.7.90 ஆகவும் 2016 ம் ஆண்டு சந்தைப் பெறுமதி ரூபா.5.70 சதமாகவும் வீழ்ச்சியடைந்தது.

அத்துடன் ஸ்ரீலங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனம் ஒவ்வொன்றும் ரூபா.10/=கொண்ட 320,000 சாதாரண பங்குகளை லபார்ஜி மகாவலி சீமெந்து கம்பனியில் கொண்டுள்ளதால் ஊக்குவிப்பு சலுகையாக லபார்ஜி மகாவலி சீமெந்து கம்பனியால் ஒவ்வொரு இரண்டு பங்குக்கும் ஒரு புதிய சாதாரணபங்கு 31 டிசெம்பர் 1995 இல் வழங்கியது. தற்பொழுது கூட்டுத்தாபனம் லபார்ஜி மகாவலிகம்பனி லிமிட்டெட்டில் 480,000 சாதாரண பங்குகளை கொண்டுள்ளது. இது பங்குகளின் 10% ஆகும். கூட்டுத்தாபனம் இந்த முதலீட்டால் 1999 வரை மிகவும் சிறந்த பலாபலன்களை (பங்குலாபம்) பெற்றுள்ளது. அதன் பிற்பாடு 2004 ம் ஆண்டில் இருந்து எந்தவிதமான பங்குலாபத்தை லபார்ஜி மகாவலி பெற்றுக்கொள்வில்லை. 2014 ம் ஆண்டுக்கான பங்குலாபம் ரூபா.1,728,000 வை 2015 ம் ஆண்டில் நாங்கள் பெற்றுக்கொண்டோம்.

## 3.0 தற்போதைய நிலைவரம்

புத்தளம் சீமெந்து வேலை மற்றும் ருகுணு சீமெந்து வேலைகள் மக்கள் மயப்படுத்தப்பட்டும்,மட்டக்குளி கடதாசிஉறை உரிமை திறைசேரிக்கு மாற்றப்பட்டும் காங்கேசன் சீமெந்து வேலை மட்டும் ஸ்ரீலங்கா சீமெந்து கூட்டுத்தாபனத்துக்கு இருந்தும் 1990 ம் ஆண்டு யூனில் வடக்கில் ஏற்பட்ட பாதுகாப்பு நிலைமையால் தொழிற்படாமலும் உள்ளது. அத்துடன் காங்கேசன் சீமெந்து வேலை கிடப்பு ஊழியர்களுக்கு திறைசேரியால் 2001 ம் ஆண்டு மார்ச் வரை சம்பளம் வளங்கப்பட்டது. 2001 ம் ஆண்டு ஏப்பிரல் அதனை நிறுத்தியது. கூட்டுத்தாபனம் கடுமையான நிதி நெருக்கடிக்குள் விழுந்துள்ளது.

2003 மற்றும் 2005 இல் அரசாங்கம் சுயவிருப்பிலட ஓய்வுபெறும் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இத் திட்டத்தின் கீழ் நிறுவனத்தைவிட்டு முறையே 173 மற்றும் 21 ஊழியர்கள் மேற்படி வருடத்தில் விலகிச் சென்றனர். திறைசேரி நட்டஈடு வழங்குவதற்கு ரூபா.49.18 மில் மற்றும் 8.51 மில் அனுமதித்தது. 2016 ம் ஆண்டில் அரசாங்கம் சுயவிருப்ப ஓய்வூதிய திட்டத்தை அறிமுகப்படித்தியதில் 36 ஊழியர்கள் அத்திட்டத்தில் தங்களது சேவையினின்றும் 31.07.2016 விலகினார்கள்.நட்டஈடு மற்றும் பணிக்கொடைக் கொடுப்பனவுக்கு திறைசேரி ரூபா.31.94 மில்லியன் அனுமதித்தது.

2008 ஆண்டில் இருந்து நிறுவனம் சாதாரண பொடலண்ட் சீமெந்து இறக்குமதியையும் வினியோகத்தையும் உறுதிப்படுத்தியது.மற்றும் 1997 ம் ஆண்டில் இருந்து கொங்கிறீற் அடிப்படையிலான உற்பத்தி மற்றும் விற்பனையும் இருந்தது.

### a) சாதாரண பொட்லண்ட் சீமெந்தை இறக்குமதி செய்தல் மற்றும் விற்பனை

2008 ம் ஆண்டில் நிறுவனத்தின் கொள்கைப்படி வாடிக்கையாளருக்கு குறைந்த விலையில் தரமான சிமேந்தை வழங்கவென நாங்கள் சீமெந்தை இறக்குமதி செய்யத் தொடங்கினோம்.

2008 ம் ஆண்டில் இருந்து பாகிஸ்தானில் இருந்து சீமெந்தை இறக்குமதி செய்தோம். கூட்டுத்தாபனம் எம்/எஸ். டி ஜி காண் சீமெந் கம்பனி லிமிட்டெட் பாகிஸ்தானில் இருந்து 12,390 மெ. தொண் சீமெந்தை 2008 ம் ஆண்டில் இறக்குமதி செய்து ''காங்கேசன்'' என்ற தர பெயரின் கீழ் சந்தையில் வினியோகித்ததுடன் 2009 ம் ஆண்டில் 84,308 மெ. தொன்னும் 2010 ம் ஆண்டில் 36,260 மெ.தொண்ணும் 2011மற்றும் 2012 முறையே 58,352 மெ.தொண் மற்றும் 28,249 மெ.தொண் இறக்குமதி செய்தோம். 2013 ம் ஆண்டில் கூட்டுத்தாபனம் 20,300 மெ.தொண் மற்றும் 2014 இல் 18,900 மெ.தொண் சீமெந்தை புதிய வினியோகத்தரன டிவான் சீமென் விமிட்டெட் பாகிஸ்தானிலி இருந்தும் இறக்குமதி செய்தோம். நாங்கள் 2015 மற்றும் 2016 இல் முறையே 1,540 மெ.தொண் மற்றும் 3,815 மெ.தொண் சாதாரண பொட்லண்ட் சீமெந்தை இறக்குமதி செய்தோம்.

**சீமெந்து விற்பனை**

| வருடம் | 2016 | 2015 |
|---|---|---|
| நிறை(மெ.தொண்) | 4,002 | 2,780 |
| பெறுமதி(ரூபா) | 60,150,810 | 37,872,483 |

### b) கொங்கிறீற் தயாரிப்புக்கள் உற்பத்தி & விற்பனை

கூட்டுத்தாபனம் 1997 ம் ஆண்டு ஒக்டோபரில் உரும்பிராயில் ஒரு கொங்கிறிற் தயாரிப்பு வேலைத்தளத்தை ஆரம்பித்தது. அந்த அலகின் பிரதான குறிக்கோள் இலங்கை மின்சார சபைக்கு வேண்டிய ஆர் சி கம்பங்களையும் ஸ்ரீலங்கா ரெலிக்கொம்முக்கு வேண்டிய ரெலிகிறாப் கம்பங்களை உற்பத்திசெய்தலே.
2009 ம் ஆண்டில் இலங்கை மின்சாரசபை மற்றும் ஸ்ரீலங்கா ரெலிகொம்முக்கு வினியோகிக்க உற்பத்தி செய்யப்பட்ட மொத்த உற்பத்தி 3,312 கம்பங்கள். இதற்கு மேலதிகமாக கொங்கிறீற் புளக்ஸ்(கட்டிகள்),தூண்கள்(பீம்),நடைபாதை கட்டிகள் மற்றும் வேலிக் கம்பங்கள் கட்டிடத்திணைக்களம்,வீதி அபிவிருத்தி அதிகாரசபை,யாழ்ப்பாணம் பல்கலைக்களகம் மற்றும் பொதுமக்களுக்கு வினியோகிக்கவென உற்பத்திசெய்யப்பட்டது. 2010 ம் ஆண்டில் மொத்த உற்பத்திகளின் எண்ணிக்கை 2,117 கொங்கிறீற் கம்பங்கள் மற்றும் 4505 பந்தல் கம்பங்கள். 2011 ம் ஆண்டில் 1,918 கொங்கிறீற் கம்பங்கள் மற்றும் 1.892 பந்தல் கம்பங்கள் மற்றும் 2012 இலும் 2,687 கொங்கிறீற் கம்பங்கள் உற்பத்தி செய்யப்பட்டன. கூட்டுத்தாபனம் 2013 ஆம் ஆண்டில் 2,003 கொங்கிறீற் கம்பங்கள் மற்றும் 2014 ம் ஆண்டில் 1,670 கொங்கிறீற் கம்பங்கள் மற்றும் 04 பந்தல் கம்பங்கள் உற்பத்தி செய்யப்பட்டன.

2015 ம் ஆண்டில் 191 எண்ணிக்கையான கொங்கிறீற் கம்பங்கள், 832 எண்ணிக்கையான பந்தல் கம்பங்கள் மற்றும் 71,771 கொங்கிறிற் கட்டிகள் உற்பத்தி செய்யப்பட்டன. 2016 ம் ஆண்டில் 168 எண்ணிக்கையான கொங்கிறீற் கம்பங்கள், 224 எண்ணிக்கையான வேலிக் கம்பங்கள், 75 எண்ணிக்கையான ஆர் சி கொலம்ஸ் மற்றும் 30,122 எண்ணிக்கையான கொங்கிறீற் கட்டிகள் உற்பத்தி செய்யப்பட்டன. இல.02/2016 சுற்றறிக்கைக்கு அமைவாக இரண்டு ஊழியர்களை மட்டும் கொங்கிறீற் உற்பத்திகளை விற்பனை செய்வதற்கு வைத்துக்கொண்டு ஏனைய சகல கா சீ வே ஊழியர்களும் 31.07.2017 இல் இருந்து தமது சேவையில் நீங்கினார்கள்.

**கொங்கிறீற் உற்பத்திகள் விற்பனை**

| வருடம் | 2016 | 2015 |
|---|---|---|
| கொங்கிறீற் கம்பங்கள் (எண்ணிக்கை) | 304 | - |
| வேலிக் கம்பங்கள் (எண்ணிக்கை) | 253 | 391 |
| ஆர் சி கொலம்ஸ் (எண்ணிக்கை) | 169 | 419 |
| கொங்கிறீற் கட்டிகள் | 46,907 | 54,805 |
| **மொத்தப் பெறுமதி (ரூபா.)** | **4.07Mn** | **2.69Mn** |

### c) நிறுவனம் திறமைமிக்கதாக கொண்டுசெல்ல இடைக்கால நடைமுறைகள்

சீமெந்து உற்பத்தி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டதன் காரணமாக நிதியியல் நிலைவரம் தொடற்சியாக சாதகமற்ற நிலையை நிறுவனம் எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டது அத்துடன் சாதாரண பொட்லண்ட் சீமெந்தை இறக்குமதி மற்றும் விற்பனை செய்வதில் இருந்து போதிய இலாபத்தை சம்பாதிக்க முடியாதும் உள்ளது.
இதற்கு ஒரு தீர்வாக நிறுவனம் மீளகட்டியெழுப்பும் திட்டத்தை தொடர்ந்தும் செயல்படுத்துவதுடன் பாராளுமன்ற தீர்மானத்தின் படி லங்கா சீமெந்து பிஎல்சி ஒரு கம்பனியாக மாற்றப்பட்டதன் பிற்பாடு ஒன்றுசோக்கப்பட்ட நிறுவனமாக 2015 இல் இருந்து செயற்பட்டது. தற்பொழுது, இந்த இரண்டும் தனித்தனியாக 2016 பெப்பிரவரியில் இருந்து வெவ்வேறான பணிப்பாளர் சபையால் முகாமை செய்யப்படுகிறது.

## 4.0 இலாபகத்தன்மை

நாங்கள் 2016 ம் ஆண்டில் 3,815 மெ.தொண் சாதாரண பொட்லண்ட் சீமெந்தை இறக்குமதி செய்ததுடன் 4002 மெ.தொண் விற்பனை செய்தோம். மற்றும் கொங்கிறீற் கம்பங்கள் 168,வேலிக் கம்பங்கள் 224,ஆர் சி கொலம் 95 மற்றும் கொங்கிறீற் கட்டிகள் 30,122அதே ஆண்டில் உற்பத்தி செய்தோம். இவ் ஆண்டில் மொத்த சம்பாத்தியம் ரூபா.64,220,735/-. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இது ஒரு 58% வளர்சியை காட்டியது. விரிவான செலவீனங்களுக்கு முன்னரான விபரிக்கப்பட்ட கணக்கியல் இலாபம் ரூபா.31,700,843/-.

### 4.0 ஸ்ரீலங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் எதிர்கால செயற்பாடுகள்

ஸ்ரீலங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனம் தற்காலிகமாக காங்கேசன்துறையில் உள்ள தொழிற்சாலை மூடப்பட்டதால் தற்பொழுது சீமெந்து தயாரிப்பதில் ஈடுபடமுடியாது. ஸ்ரீசூகூ தனது ஓரே ஒரு தொழிற்சாலை ஆனதால் முடியாதுள்ளது. எப்படியிருந்த பொழுதும் சீமெந்தை மீளவும் உற்பத்தி செய்யத் தொடங்குவது காசீவே ஆல் உடனடியாக செயல்படுத்துவது கடினமானதாகும்.

காங்கேசன் சீமெந்து வேலையை மீள இயங்கவைப்பது கூட்டுத்தாபனத்தின் பிரதான கடமைப்பாடாகும். இது சம்பந்தமாக பல நடவடிக்கைகள் பல வருடங்களாக மேற்கொள்ளப்பட்டபோதும் மீளவும் உற்பத்தியை மேற்கொள்வது சாதகமற்ற ஒரு நிலைமையே காணப்படுகிறது. வேண்டிய அறிக்கைகள் சம்பந்தப்பட்ட அதிகாரங்கள் மற்றும் முன்னேற்றகரமான பாதுகாப்பு விலகல் ஒழுங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எப்படியிருந்த பொழுதும், இவ் வருடத்தில் இருந்து சுயவிருப்ப ஓய்வூதியத் திட்டம் நிறைவடைந்ததன் பிற்பாடு 16 ஊழியர்களுடன் நிறுவனத்தை திறம்பட்ட நிலமைக்கு உயர்துவதற்கு வியாபார நடவடிக்கைகளை முன்னோக்கி கொண்டுசெல்வோம்.

## 5.0 பாராட்டுதல்கள்

2014 இல் ஸ்ரீல.சீ.கூட்டு த்தாபனத்திற்கு நேரடியாக ஒத்துழைப்பு வழங்கி கௌரவ மாண்புமிகு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர், அமைச்சின் உத்தியோகத்தர்கள், பொதுத்திறைசேரி,ஸ்ரீலங்கா தரநிர்ணய நிறுவனம்,ஸ்ரீலங்கா துறைமுக அதிகாரசபை மற்றும் அரச வங்கிகள், ஏனைய அரசாங்க நிறுவனங்கள் மற்றும் சீமெந்து உற்பத்தி நிறுவனங்களுக்கு ஸ்ரீ.சீ.கூ பணிப்பாளர் சபை மனப்பூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

அத்துடன் திறம்பட தமது சேவையை ஸ்ரீலங்கா சீமெந்து கூட்டுத்தாபனத்துக்கு வழங்கியமைக்காக ஊழியர்களுக்கு பணிப்பாளர் சபையால் பாராட்டப்படுகின்றனர்.

# கூட்டுத்தாபனத்தின் தகவல்கள்

**பதியப்பட்ட தலைமைக் காரியாலயம்**

ஸ்ரீலங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனம்
இல.27,வொக்சோல் மன்சன்,
வொக்சோல் வீதி கொழும்பு – 02.

தொலைபேசி இலக்கங்கள்: 011-2440201,2440203

தொலைநகல் இல. : 011-2448866

**பதியப்பட்ட பதிலீட்டு தலைமைக் காரியாலயம்**

வரையறுக்கப்பட்ட லங்கா சீமெந்
இல.27,வொக்சோல் மன்சன்,
வொக்சோல் வீதி கொழும்பு – 02.

தொலைபேசி இலக்கங்கள் : 011-2447746, 254158

**யாழ்ப்பாணம் கொங்கிறீற் திட்டம்**

காங்கேசன் சீமெந்து வேலைத்தளம்

காங்கேசன்துறை.

தொலைபேசி இல. : 021 321 5340/41

**சீமெந்துக் களஞ்சியம்**

472, ஸ்ரீசங்கராஜ மாவத்தை,

கொழும்பு 10.

தொ.பேசி. : 011-3030041,தொ.நக.: 011-4923959

**சீமெந்துக் களஞ்சியம்**

64/2, ஸ்ரீசங்கராஜ மாவத்தை,

கொழும்பு 10.

தொ.பே. /தொ.நக : 0112440207

**வங்கியாளர்கள்**

மக்கள் வங்கி

இலங்கை வங்கி

கொழும்பு – 07.

**கணக்காய்வாளர்கள்**

கணக்காய்வாளர் திணைக்களம்,

பத்தரமுல்லை.

# ஸ்ரீலங்கா சீமெந்து கூட்டுத்தாபனம்

2016 – 2018 ம் ஆண்டில் முகாமைச் சபையில் பினவரும் பணிப்பாளர்களைக் கொண்டிருந்தது.

| | | |
|---|---|---|
| 01. திரு.ஏச்.அகமட் பையிலா | தலைவர் | - நியமனம் 10.12.2015 |
| 02. திரு.றியாட்சாலி | தலைவர் | - நியமனம் 25.07.2018 |
| 03. திரு.எஸ்.ஆப்டின் எகியா | முகாமைப் பணிப்பாளர் | - நியமனம் 25.02.2016 |
| 04. திரு.டபிள்யு.டி.யானக | பணிப்பாளர் | - நியமனம் 25.02.2015 |
| 05. திரு.எம்.எஸ்.எம்.கபீர் | பணிப்பாளர் | - நியமனம் 18.03.2015 |
| 06. திரு.என்.எம்.முனவர் | பணிப்பாளர் | - நியமனம் 31.03.2015 |
| 07. திரு.ஏ.றபீக் | பணிப்பாளர் | - நியமனம் 30.04.2015 |
| 08. திரு.டி.எஸ்.ஏ.கொஸ்ர | திறைசேரிப் பிரதிநிதி | - நியமனம் 30.10.2015 |
| 09. திரு.ரி.ஓ.ஆர்.வணிகரத்ன | அமைச்சின் அவதானிப்பாளர் | - நியமனம் 10.03.2015 |

**சீரேஸ்ட முகாமைக் குழு**

| | | |
|---|---|---|
| 01. திருமதி.எம்.ஜி.ஏ.ஆர்.ஜெயதிலக | கணக்காளர் | தலைமைக் காரியாலயம் |
| 02. திருமதி.இ.எஸ்.சாந்தனி | நிர்வாக உத்தியோகத்தர் | தலைமைக் காரியாலயம் |

# ஸ்ரீலங்கா சீமெந்து கூட்டுத்தாபனம்
## 31.12.2016 இல் மனித வளங்கள்

| வகைகள் | சிரேஸ்ட முகாமை | மத்திய முகாமை | கீழ் முகாமை | உதவி முகாமைத்துவ | ஆரம்ப மட்டம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| தலைமைக் காரியாலயம் | -- | 01 | 01 | 04 | 07 | 13 |
| காங்கேசன் சீமெந் வேக்ஸ் | -- | -- | -- | -- | 01 | 01 |
| மொத்தம் | **--** | **01** | **01** | **04** | **08** | **14** |

**நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்பான தலைவரின் அறிக்கை**

ஸ்ரீலங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனம் 2015 பெப்பிரவரி வரை அரச வளஙகள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயற்பட்டது. தற்பொழுது கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் கீழ் தனது நடவக்கைகளை தொடர்கின்றது.ஸ்ரீலங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனம் அரச வளங்கள் முயற்சி மற்றும் அபிவிருத்தி அமைச்சின் கீழ் 2015 பெப்பிரவரி வரை தொழிற்பட்டது. தற்பொழுது, கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் கீழ் செயல்படுகிறோம்.

நிறுவன தலைமைக் காரியால கிளையால் தொடர்ந்தும் சாதாரண பொட்லண்ட் சீமெந்தை இறக்குமதி செய்வதுடன் வினியோகிக்க ஒப்புதல் எடுத்தது. சுயவிருப்ப ஓய்வூதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியதன் பிற்பாடு 31.07.2016 இல் கா சீ வேஇல் உள்ள கொங்கிறீற் தளத்தை மூடுவதற்குத் தீர்மானித்தோம்.

31.07.2016 இல் சுற்றறிக்கை இல.02/2016 இன் கீழ் திறைசேரியின் உதவியுடன் சுயவிருப்ப ஓய்வூதிய திட்டத்தை நிறைவு செய்ததுடன் 36 ஊழியர்கள் தமது சேவையை விட்டு இத் திட்டத்தில் விலகினார்கள்.

இதன் பின்னணியிலும்,ஸ்ரீலங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்பாடுகளால் ரூபா.64.22 மில்லியனான ஒரு புரள்வு பதியப்பட்டதுடன் 2016 ம் ஆண்டில் பரந்த செலவீனங்களுக்கு முன்னரான கணக்கியல் இலாபம் ரூபா.31.07 மில்லியனாகும்.

அத்துடன், நாங்கள் ரூபா.174.8 மில்லியன் பலப்படுத்திய புரள்வு பதியப்பட்டதுடன். ஒன்றிணைந்த கணக்கியல் இலாபம் இவ் வருட விரிவான செலவீனங்கள் ரூபா.21.02 மில்லியனுக்கு முன்னரானது, எமது துணைநிலை கம்பனி லங்கா சீமெந் பிஎல்சியுடன் 2016 ஆண்டில்.

எப்படியிருந்த பொழுதும், நாங்கள் தொடர்ந்தும் எமது தொழிற்பாட்டை 14 நிரந்தர ஊழியர்களுடன் 01 ஓகஸ்ட் 2016 இல் இருந்து தொடர்கின்றோம்.எமது காணி மற்றும் ஏனைய சொத்துக்களில் ஒரு புதிய அபிவிருத்தித் திட்டத்தை எதிர்பார்த்து அடுத்த நிதியில் ஆண்டில் அதனை நம்பியுள்ளோம். நாங்கள் எதிர்பார்க்கிறோம் இந்த திட்டத்தை கொண்டுவந்தால் நிறுவனம் நீண்டகால சலுகையை பெறமுடியுமென.

எப்படியிருந்த பொழுதும்,இவ் வருடத்தில் இருந்து நிறுவனம் வர்த்தக நடவடிக்கையை திறமையாக செயற்படுத்துவதுடன் நாங்கள் முயற்சிசெய்து வெற்றிகொள்ள உறுதியெடுப்போம்.

***கையொப்பம்,***
**குசேயின் அகமட் பயிலா**
**தலைவர்**
**ஸ்ரீலங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனம்**

ஸ்ரீலங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனம்

நிதியியல் நிலமையின் அறிக்கை

31 டிசெம்பர் முடிவடைந்த ஆண்டுக்கானது, 2012 – 2016

| | | | மீள்குறிப்பிட்ட | | |
|---|---|---|---|---|---|
| | 2016 | 2015 | 2014 | 2013 | 2012 |
| **சொத்துக்கள்** | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 |
| **நடைமுறைச் சொத்துக்கள் அல்லாதவை** | | | | | |
| உடமைகள், யந்திரம் &சாதனங்கள் | 3,887 | 4,173 | 779,317 | 779,486 | 608,596 |
| சொத்துக்களில் முதலீடு | 773,700 | 773,700 | - | - | - |
| நீண்டகால வருமதிகள் | - | 757,224 | 757,224 | 757,223 | 757,223 |
| முதலீடுகள் | 624,063 | 862,458 | 721,589 | 678,244 | 1,090,019 |
| நிதியியல் சொத்துக்கள் | 5,162 | 35,469 | 33,428 | 31,247 | 28,280 |
| | **1,406,812** | **2,433,024** | **2,291,558** | **2,246,200** | **2,484,119** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | |
| பொருட்கள் | 3,099 | 8,594 | 18,933 | 39,024 | 19,739 |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | 89,212 | 80,551 | 96,247 | 89,549 | 84,242 |
| முற் கொடுப்பனவுகள் | - | - | - | 261 | 244 |
| பணமும் பணத்துக்கு நிகரானவையும் | 13,687 | 8,743 | 2,076 | 3,592 | 4,201 |
| | **105,998** | **97,838** | **117,256** | **132,426** | **108,426** |
| **மொத்தச் சொத்துக்கள்** | **1,512,810** | **2,530,863** | **2,408,814** | **2,378,626** | **2,592,545** |
| **உரிமையாண்மை & பொறுப்புக்கள்** | | | | | |
| **உரிமையாண்மை** | | | | | |
| குறிப்பிட்ட மூலதனம் | 966,971 | 966,971 | 966,971 | 966,971 | 966,972 |
| பொது ஒதுக்கங்கள் | 9,997 | 9,997 | 9,997 | 9,997 | 9,997 |
| மீள்மதிப்பாக்கம் செய்யப்பட்ட ஒதுக்கங்கள் | 536,119 | 536,119 | 713,619 | 713,619 | 536,119 |
| நிறுத்திவைத்த சம்பாத்தியம் | (210,289) | 515,234 | 333,315 | (66,820) | 357,783 |
| விற்பனைக்குள்ள ஒதுக்கங்கள் | (465,956) | (227,560) | (368,430) | - | - |
| | **836,842** | **1,800,761** | **1,655,474** | **1,623,767** | **1,870,871** |
| **நடைமுறைப் பொறுப்புக்கள் அல்லாதவை** | | | | | |
| நீண்டகாலப் பொறுப்புக்கள் | 492,426 | 500,426 | 519,303 | 543,914 | 578,543 |
| தவிர்க்கப்பட்ட ஓய்வுச் சலுகைகள் | 3,298 | 18,697 | 19,394 | 18,290 | 17,952 |
| | **495,724** | **519,123** | **538,698** | **562,204** | **596,495** |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | | |
| வியாபார மற்றும் ஏனைய செலுத்துமதிகள் | 46,502 | 81,305 | 93,227 | 85,224 | 96,195 |
| தற்போதைய நிலைமையில் பொறுப்புக்களால் கொண்டுவரப்பட்ட வட்டிகள் | 97,793 | 101,020 | 68,515 | 79,015 | 2,068 |
| வங்கிக்கடன் வட்டி செலுத்துமதிகள் | 21,768 | - | - | - | - |
| பணமும் பணத்துக்கு நிகரானவையும் | 14,181 | 28,653 | 52,900 | 28,416 | 26,916 |
| | **180,244** | **210,978** | **214,642** | **192,655** | **125,179** |
| **மொத்த உரிமையாண்மை &பொறுப்புக்கள்** | **1,512,810** | **2,530,863** | **2,408,814** | **2,378,626** | **2,592,545** |

அடைப்புக்குள் இருக்கும் எண்கள் கழிக்கவேண்டும் என்பதை பிரதிபலிக்கின்றது.

**திரட்டப்பட்ட வரமாண அறிக்கை**

**31டிசெம்பர் 2012 –2016 முடிவடைந்த ஆண்டுக்கான**

| | 2016<br>ரூபா.'000 | மீள்குறிப்பிட்ட<br>2015<br>ரூபா.'000 | 2014<br>ரூபா.'000 | 2013<br>ரூபா.'000 | 2012<br>ரூபா.'000 |
|---|---|---|---|---|---|
| வருமாணம் | 64,221 | 40,571 | 285,657 | 287,913 | 365,333 |
| விற்பனைப் பெறுமதி | (66,525) | (50,781) | (280,878) | (272,178) | (374,016) |
| **மொத்த இலாபம் (நட்டம்)** | **(2,304)** | **(10,211)** | **4,779** | **15,735** | **(8,683)** |
| ஏனைய வருமாணம் | 91,542 | 60,043 | 34,233 | 34,885 | 32,751 |
| வினியோகப் பெறுமதி | (292) | (1,198) | (2,951) | (6,670) | (4,906) |
| நிர்வாகப் பெறுமதி | (41,172) | (30,461) | (29,211) | (448,079) | (78,899) |
| நிதிப் பெறுமதி | (15,704) | (15,334) | (20,642) | (20,474) | (15,362) |
| **திரட்டப்பட்ட ஏனைய வருமாணங்கள் /(செலவீனங்களுக்கு) முன்னரான இலாபம்/(நட்டம்)** | **32,070** | **2,839** | **(13,793)** | **(424,603)** | **(75,099)** |
| **நிதியியல் சொத்துக்கள் மீதான சம்பாத்தியம்(இழப்பு) திரட்டிய வருமாணம்/(செலவீனங்கள்)** | (995,620) | 140,870 | 43,345 | - | - |
| **வரிக்கு முன்னரான இலாபம் (நட்டம்)** | **(963,550)** | **143,709** | **(29,552)** | **(424,603)** | **(75,099)** |
| வரிகள் | (369) | (255) | - | - | - |
| **வரிக்குப் பின்னரான இலாபம் (நட்டம்)** | **(963,181)** | **143,454** | **(29,552)** | **(424,603)** | **(75,099)** |

அடைப்புக்குள் இருக்கும் எண்கள் கழிக்வேண்டும் என்பதை பிரதிபலிக்கின்றது.

## கணக்காய்வுக் குழுவின் அறிக்கை -2016

கூட்டுத்தாபனம் கணக்காய்வுக் குழுவில் மூன்று நிறைவேற்றுத்தரம் அல்லாத பணிப்பாளர்களை கொண்டிருந்தது, கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் பிரதம உள்ளக கணக்காய்வாளர் மற்றும் ஒரு பிரதிநிதி கணக்காய்வாளர் அதிபதி திணைக்களத்தில் இருந்து குழுவின் அவதானிப்பாளராக.

திருமதி.டி.எஸ்.ஏ.பொஸ்ர குழுவின் தலைவர்,திரு.எம்.எஸ்.எம்.கபீர் மற்றும் திரு.என்.எம்.முனவர் ஆகிய இருவரும் ஏனைய நிறைவேற்று தரமல்லாத பணிப்பாளர்களாக குழுவின் பார்வையின் கீழ் உள்ளனர்.

கணக்காய்வுக் குழுவில் உள்ளடங்கும் பிரதான செயற்பாடு மற்றும் பொறுப்புக்கள்,

அ) ஸ்ரீலங்கா கணக்கியல் நியமம் மற்றும் ஏனைய பொருத்தமான சட்ட வேண்டுகோள்கள் தொடர்புடன் குற்றச்சாட்டுகள் அற்ற நிதியியல் அறிக்கையை செய்துமுடிப்பதனை உறுதிப்படுத்த மேற்பார்வை செய்தலை நோக்காக சபைக்கு ஒத்துழைப்பு வழங்குதல்

ஆ) சகல சம்பந்தப்பட்ட சட்டம் மற்றும் ஒழுங்குகளை அரசாங்கத்தால் வினியோகிக்கப்பட்ட சுற்றுநிருபத்துக்கு அமைவாக நடைபெறுதலை உறுதிப்படுத்தல் மற்றும் தொடர்ந்தும் குற்றச்சாட்டுக்கள் இல்லாமல் சபை நடவடிக்கைகளை மேற்கொள்ள சபைக்கு ஒத்துழைப்பு வழங்குதல்,

இ) உள்ளக திறனாய்வு / வெளியக கணக்காய்வு அறிக்கை மற்றும் கோப்பின் சிபார்சுகளை சபை சீர்படுத்த நடவடிக்கை எடுக்க உதவிபுரிதல்.

ஈ) உள்ளக கட்டுப்பாட்டு முறைமையில் போதுமான முன்னேற்றத்தை மற்றும் அறிமுகப்படுத்த சபைக்கு உதவுதல்.

பினவரும் நடவடிக்கைகள் இவ்வருட நிதியில் பார்வையில் உள்ளக கணக்காய்வுக் குழுவின் உறுதிப்படுத்தலாகும்

- கணக்காய்வு செய்யப்படாத மாதாந்த நிதியில் அறிக்கையை திறனாய்வு செய்தல்.
- கணக்காய்வு செய்யப்பட்ட வருடாந்த நிதியியல் அறிக்கையை திறனாய்வு செய்தல்
- கணக்காய்வாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட மற்றும் எச்சரிக்கை செய்யப்பட்ட மற்றும் முகாமையால் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை தொடர்பாக கணக்காய்வு அறிக்கைகளை திறனாய்வு செய்தல்
- கொடுப்பனவு வேண்டுகோள்கள் மற்றும் சட்டபூர்வமான அறிக்கையுடன் குற்றச்சாட்டு அறிக்கையை திறனாய்வு செய்தல்.

***கையொப்பம்,***
**டி.எஸ்.ஏ.கொஸ்ர,**
**தலைவர்,**
**கணக்காய்வுக் குழு**

මගේ අංකය
எனது இல.
My No. பிஸீஎம்/ஏ/எஸ்எல்சீசீ/37/2016/எப்ஏ

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date 2018 ஜனவரி 28 திகதி

தலைவர்,
இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனம்,

**இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனத்தின் மற்றும் அதனை நிருவகிக்கும் கம்பனி ஆகிய வ/ப லங்கா சீமெந்து கம்பனியின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இணைந்த நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனத்தின் மற்றும் அதனை நிருவகிக்கும் கம்பனி ஆகிய வ/ப லங்கா சீமெந்து கம்பனியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணைந்த நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இணைந்த அகல் விரிவான வருமானங்கள் கூற்று, இணைந்த இணைந்த உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் மற்றும் 1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று சபையின் தலைவருக்கு 2017 அக்டோபர் 11 ஆம் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவதம்

நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க நடத்தப்படும் கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்கள் மீதான அபிப்பிராயம் ஒன்றினை வெளிப்படுத்துதல் எனது பொறுப்பாகும்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிட்ட விடயங்களின் விளைவாக நிதி நிலைமைக் கூற்றில், அகல் விரிவான வருமானங்கள் கூற்றில் மற்றும் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றில் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத விடயங்கள் மற்றும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாக காணப்படுகின்றதா என்பதனை நிச்சயிக்க முடியாதுள்ளளேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம் - தொகுதி

இவ்வறிக்கையில் 2.2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந் நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினை தெரிவிக்கவில்லை.

### மறுப்பு அபிப்பிராயம் - கூட்டுத்தாபனம்

இவ்வறிக்கையில் 2.2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந் நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினை தெரிவிக்கவில்லை.

## 2.2 தொகுதியின் நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 தொகுதியின் இடையறா நீடித்தல்

கூட்டுத்தாபனத்தின் மூலதனம் ரூபா 967 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன் திரண்ட நட்டம் ரூபா 676 மில்லியன்களாகும். கூட்டுத்தாபனத்தின் நீடிப்புக்கு தாக்கம் ஏற்பட்டிருக்காவிடினும், வரையறுக்கப்பட்ட லங்கா சீமெந்து கம்பனி தொடர்ச்சியான நட்டம் அடைந்துள்ள காரணத்தினால் இணைந்த உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் பிரகாரம் ரூபா 3,045 மில்லியன் இற்கான திரண்ட நட்டம் ஒன்றினை பெற்றிருந்ததுடன் மூலதனம் ரூபா 2,702 மில்லியன் ஆக இருந்தது. அதன் பிரகாரம் பங்கு மூலதனத்தின் 112.7 சதவீதம் அரிப்பு அடைந்திருந்ததென அவதானிக்கப்பட்டதுடன் அதன் காரணமாக திறைசேரியின் உதவியின்றி வரையறுக்கப்பட்ட லங்கா சீமெந்துக் கம்பனியை இடையறாமல் நடத்துதல் நிச்சயமற்றதென அவதானிக்கப்பட்டது.

### 2.2.2 கூட்டுதாபனத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

**இலங்கை கணக்கீட்டு நியமம் 37**

நியமத்தின் 86 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் எதிர்பாராப் பொறுப்புக்கள் தொடர்பாக போதியளவான தகவல்கள் நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்த வேண்டுமெனினும், கூட்டுத்தாபனத்தினால் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிமன்றத்தில் விசாரணை நடைபெறும் 15 வழக்குகள் தொடர்பாக நியமத்தின் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

#### 2.2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் சீமெந்து விற்பனைப் பெறுமதியினை நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்யும் போது கூட்டுத்தொகை ரூபா 600,360 இற்கான தேசத்தை கட்டியெழுப்பும் வரியும் சேர்க்கப்பட்ட மொத்த விற்பனை பெறுமதியினை பதிவு செய்தமையினால் ஆண்டிற்கான மொத்த நட்டம் அப்பெறுமதியினால் குறைந்திருந்தது.

(ஆ) சீமெந்து கூட்டுத்தாபத்திற்கு சொந்தமான புத்தளப் பகுதியில் அமைந்துள்ள காணி ஒன்று ஹொல்ஸிம் லங்கா கம்பனிக்கு வாடகைக்கு கொடுத்திருந்ததுடன் வாடகை உடன்படிக்கைக் காலம் குறிப்பிட்ட வருடத்தின் மே முதல் அடுத்த வருடம் ஜுன் மாதம் வரையாகும். அதன் பிரகாரம் 2015/2016 ஆண்டுகளுக்காக கிடைத்திருந்த ரூபா 121,000 இற்கான வாடகை வருமான 2015 ஆண்டிற்கான வருமானம் ஒன்றென பண அடிப்படையில் கணக்கீடு செய்திருந்தமையால் 2016 ஆண்டிற்காக வாடகை வருமானம் ரூபா 50,416 தொகை குறைவாக பதிவு செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டு ஜுன் முதல் திசெம்பர் வரையான ரூபா 70,584 இற்கான பெற வேண்டிய வருமானத் தொகையொன்றினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) புத்தளம் அருவக்காலு காணியில் சுண்ணாம்பு கல் படிவு தொடர்பாக தொழில் நுட்ப ஆய்வு விடயங்களுக்காக நிலத்திற்கு நுழைவதற்கான கட்டணமாக தனியார் நிறுவனமொன்றில் இருந்து கிடைத்திருந்த ரூபா 321,900 இற்கான பெறுமதியில் ரூபா 31,900 பெறுமதிக்கூட்டிய வரி ஆக இருந்ததுடன் அந்தப் பெறுமதி கூட்டிய வரிப் பெறுவனவுகளையும் கிடைத்தவைகளையும் பலவின வருமானம் என கணக்கீடு செய்திருந்தது.

(ஈ) 2012 ஆண்டின் போது செலுத்தியிருந்த பொருளாதார சேவை கட்டணத் தொகையில் முன் கொண்டு செல்ல முடியாத ரூபா 1,065,027 இற்கான தொகை தடுத்து வைக்கப்பட்ட இலாபக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட வேண்டுமெனினும், கூட்டுத்தாபனத்தினால் அதனை மீளாய்வாண்டிற்கான அகல விரிவான வருமான கூற்றிற்கு வரவு வைத்திருந்தமையினால் ஆண்டிற்கான மிகை அதே தொகையால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) 2010 ஆண்டின் போது கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான எண்ணெய் தாங்கிகள் இலங்கை பெற்றோலிய மொத்த களஞ்சிய முடிவிட கம்பனிக்கு வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2010 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரை கூட்டுத்தாபனத்திற்கு அறவிடப்பட வேண்டிய மொத்த வாடகைத் தொகை ரூபா 84.6 மில்லியன் ஆக இருந்தது. அப் பெறவேண்டிய வருமானத்தை கணக்கீடு செய்திருக்காதுடன், அவ் வருமானம் 2016 ஆண்டு இறுதி வரையும் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஊ) கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காங்கேசன்துறையில் அமைந்துள்ள தொடர் எண்ணெய் தாங்கிகள் மற்றும் காணியின் உரிமையை எழுத்து மூலம்

உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், 1989 ஆண்டின் பின்னர் நிதி நிலைமைக் கூற்றில் இந்த சொத்துக்கள் உற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(எ) புத்தளம் மாவட்டத்தில் பாலாவியில் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 221 ஏக்கர் காணியில் 152 ஏக்கர்களை மாத்திரம் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருந்த போதிலும், மீதி 69 ஏக்கர்களை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

### 2.2.2.3 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

நிறுவனத்தினால் பேணப்பட்டுவரும் வங்கி நடைமுறைக் கணக்கொன்றிற்காக கணனிகள் மூலம் பேணப்படும் காசேட்டின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 2,654,122 தொகை மீதியொன்று காணப்பட்ட போதிலும் கையினால் எழுதப்பட்ட காசோட்டின் பிரகாரம் அம் மீதி ரூபா 1,106,032 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 1,548,090 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. 2008 ஆண்டு முதல் காணப்படும் அவ் வித்தியாசத்தை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் கணனி மயப்படுத்தப்பட்ட காசேட்டின் மீதியை அடிப்படையாக வைத்து நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 2.2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் ஒவ்வொரு கணக்கு விடயங்களுக்கு எதிராக காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால் அக்கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமான செய்மையாய்வதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

| கணக்கு விடயம் | பெறுமதி | சமர்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| வங்கிக் கடன் | 56,293,352 | கடன் கோவைகள் மற்றும் அட்டவணைகள் |
| பேற வேண்டிய வைப்புக்கள் | 859,437 | மீதியை உறுதிப்படுத்தும் கடிதங்கள் |

## 2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வியாபார மற்றும் ஏனைய பெற வேண்டிய மீதிகள் ரூபா 89,212,053 தொகையாக காணப்பட்டதுடன், அம்மீதியில் 1 வருடம் முதல் 3 வருடங்கள் வரையான ரூபா 11,010,343 தொகை மற்றும் 3 வருடங்கள் மிகைத்துள்ள ரூபா 57,988,878 இற்கான மீதியும் காணப்பட்டது. இந்த நிலுவைக் கடன் மீதியினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய வியாபார மீதி ரூபா 46,502,068 தொகையாக இருந்ததுடன் அம்மீதியில் 1 வருடம் முதல் 3 வருடங்கள் வரையான ரூபா 13,180,262 தொகை மற்றும் 3 வருடங்களை மிகைத்த ரூபா 30,086,483 இற்கான மீதிகளும் காணப்பட்டன. அம் மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) கூட்டுத்தாபத்தினால் 2014 மற்றும் 2015 ஆண்டுகளின் போது 13 சந்தர்ப்பங்களில் 02 மாதங்களில் செலுத்தும் அடிப்படையில் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காணியை பிணையாக வைத்து குறுகிய கால கடன் ஒன்று அரச வங்கி ஒன்றிலிருந்து பெறப்பட்டிருந்தது. இந்த கடன் தொகை 2015 செப்டம்பர் 15 திகதி அளவில் செலுத்தி முடிவாக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 56,293,352 செலுத்த வேண்டியிருந்து.

(ஈ) கூட்டுத்தானம் பெற்றிருந்த வங்கிக் கடன் தொடர்பாக தவணைப் பணம் மற்றும் வட்டி உரிய முறையில் செலுத்தாமையால் வட்டித் தொகைக்காகவும் வட்டி செலுத்துவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு நேரிட்டிருந்தது. அதன் பிரகாரம் கடந்த ஆண்டுகளின் பெற்றிருந்த வங்கிக் கடன் அதற்காக வட்டியின் கூட்டுத்தொகை ரூபா 42,000,000 தொகை பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் குறுகியகால கடன் கணக்கிற்கு மாற்றப்பட்டதுடன் 2016 திசெம்பர் ஒன்றினைந்த 31 திகதியில் உள்ளவாறு அந்தக் கடன் கணக்கில் தீர்க்கப்படாத மீதி ரூபா 17,500,000 தொகையாக இருந்தது.

(உ) அமைச்சரவை தீர்மானம் ஒன்றின் பிரகாரம், சர்வதேச கம்பனி ஒன்றிற்கு செலுத்த வேண்டிய கடன் தொகை ஒன்றினை தீர்ப்பதற்காக அரச வங்கி

ஒன்றில் இருந்து 2012 ஆண்டின் போது ரூபா 40,000,000 இற்கான கடன் தொகையொன்று பெறப்பட்டிருந்தது. 2013 ஆண்டு முதல் 5 வருடங்களுக்குள் 5 சமமான தவணைப் பணமாக அக் கடனை செலுத்தி முடிக்க வேண்டியிருந்த போதிலும் உரிய முறையில் தவணை பணம் செலுத்தப்படாமையால் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அந்த மொத்தக் கடன் தொகையில் செலுத்த வேண்டிய மொத்த கடனின் பெறுமதி ரூபா 24,000,000 தொகை ஆக இருந்தது.

## 2.4 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங் களுடன் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| நிதிப் பிரமாணம் 396 | 02 வங்கி நடைமுறை கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 1,116,485 தொகை பெறுமதி உடைய வழங்கியிருந்த போதிலும் கொடுப்பனவுக்காக சமர்பிக்கப்படாத 09 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் காசோலைகளை இரத்து செய்துள்ளன. |
| (ஆ) 2003 ஜுன் 02 திகதிய பீசஊ/12 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.2.6 ஆம் பிரிவு | செயலாற்றுகை அறிக்கை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை பணிப்பாளர் சபையினால் மீளாய்வு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் காலாண்டு முடிவடைவதற்கு 30 நாட்களுக்கு முன்னர் அவ் அறிக்கை பொது முயற்சிகள் |

| | | |
|---|---|---|
| | | திணைக்களத்திற்கு மற்றும் திறைசேரிக்கு சமர்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2015 ஜுலை 14 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | பல்வேறு காரணங்களுக்காக வழங்கப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 1,388,569 இற்கான முற்பணத் தொகையினை இனங்கண்டு தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்காமல் தொடர்ந்து நிதிக்கூற்றுக்களில் முற்பணம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2016 மார்ச் 31 திகதிய 5/2016 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காங்கேசன்துறையிலுள்ள தொடர் எண்ணைத் தாங்கிகளின் பெறுமதி ரூபா 2,624,338 இற்கான காணி, கட்டிடங்கள், தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக மீளாய்வாண்டிற்காக கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவு

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வண்டின் நிதி விளைவுகள் ரூபா 31,700,843 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் ரூபா 2,583,617 இற்கான மிகையொன்று காணப்படாமையினால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 29,117,226 இற்கான வளர்ச்சி ஒன்று காணப்பட்டது. மீளாய்வாண்டின் மொத்த நட்டம் ரூபா 7,906,665 இனால் அதாவது 77.4 சதவீதத்தினால் குறைந்திருத்தல் மற்றும் ஏனைய வருமானங்கள் ரூபா 31,498,348 இனால், அதாவது 52.46 சதவீதத்தினால் அதிகரித்திருத்தல் மேற்கூறிய வளர்ச்சிக்கு முக்கிய காரணங்கள் உள்ளது.

மீளாய்வாண்டினதும் கடந்த நான்கு ஆண்டுகளில் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2012 ஆண்டு முதல் 2014 ஆண்டு வரை இடையறாமல் தேறிய நட்டமொன்றினை பெற்று மீண்டும் 2015 மற்றும் 2016 ஆண்டுகளின் போது முறையே

ரூபா 2,583,617 தொகை மற்றும் ரூபா 31,700,843 இற்கான தேறிய இலாப நிலைமையொன்று ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் வேதனம், அரசுக்கு செலுத்தய வரி மற்றும் நடைமுறை அல்லாத சொத்துகளுக்காக பெறுமானத் தேய்வு கழித்தல்களை மீண்டும் சீராக்கல் செய்த பின்னர் கூட்டுத்தாபனத்தின் பங்களிப்பு 2012 ஆண்டின் போது ரூபா 26,165,135 இற்கான நேர் பெறுமதியாக இருந்ததுடன் 2013 ஆண்டின் போது ரூபா 338,370,664 இற்கான மறை பெறுமதியினை பெற்றிருந்தது. 2014 மற்றும் 2015 ஆண்டுகளின் போது பங்களிப்பு நேர் பெறுமதியில் காணப்பட்டதுடன் 2016 இல் ரூபா 70,978,162 இற்கான நேர் பெறுமதியில் காணப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

1959 ஜனவரி 2 ஆம் திகதிய 11634 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் பிரகாரம் சீமெந்து உற்பத்தி இறக்குமதி செய்தல் மற்றும் சந்தைப்படுத்தல், சீமெந்தினால் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களைச் சந்தைப்படுத்தல் அல்லது சீமெந்து கொங்கிரீட் உட்பட தொலைபேசி மற்றும் மின்சார கம்பித் தூண்கள், தொலைபேசி குடில்கள் நீர் கொண்டு செல்லும் உபகரணங்கள், ஹியுப் குழாய்கள் மற்றும் டயில்கள் உற்பத்தி செய்தல், மின் சக்தி வலுச் சக்தி மொத்தமாக வழங்குதல் கூட்டுத்தாபனத்தின் முக்கிய குறிக்கோள்களாக இருந்தன.

மேற்கூறிய குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சீமெந்து உற்பத்தி செய்து சந்தை படுத்துதல் மற்றும் சீமெந்துடன் சம்பந்தப்பட்ட உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்தல் கூட்டுத்தாபனத்தின் முக்கிய குறிக்கோளாக இருந்த போதிலும் கடந்த யுத்த சூழ்நிலையில் காங்கேசன்துறை சீமெந்து உற்பத்தி நிறுத்தப்பட்ட பின்னர் தற்போது சீமெந்து பைகள் இறக்குமதி செய்து சந்தைப்படுத்தல் மற்றும் கொங்கிரீட் உற்பத்தி பொருட்களைச் சந்தைப்படுத்தல் முதல் நிறுவனத்தின் அடிப்படைக் கருமம் வரையறையாகியிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான கூட்டிணைப்புத் திட்டம் மற்றும் செயல் நடவடிக்கை திட்டத்துடன் செயலாற்றுகை அறிக்கையுடன் ஒப்பீடு செய்யும் போது

உள்ளவாறான செயற்பாடுகளை ஒப்பீடு செய்யக்கூடிய வகையில் அவ் அறிக்கை தயாரித்திருக்கவில்லை.

(இ) செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது ரூபா 107,858,978 தொகை பெறுமதியாக சீமெந்தியினை சந்தைப்படுத்துவதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் நிறுவனம் நிதிக் கட்டுப்பாடுகளுக்கு முகங்கொடுத்தமையினால் செயலாற்றுகை அறிக்கைளின் பிரகாரம் ரூபா 63,030,000 தொகை பெறுமதியான சீமெந்து மாத்திரமே சந்தைப்படுத்தியிருந்தது. அதன் பிரகாரம் நெருங்கிய செயலாற்றுகை எதிர்பார்த்த இலக்கில் 41.56 சதவீதம் ஆகும்.

(ஈ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிய உள்ளவாறு கொங்கிரீட் தூண்கள் மற்றும் சீமெந்து அச்சுக் கற்கள் உற்பத்தி செய்து விற்பனை செய்ததன் மூலம் ரூபா 2,408,000 இற்கான வருமானமொன்றினை உழைத்திருந்த போதிலும் செயல் நடவடிக்கை திட்டத்தில் தொடர்புடைய இலக்குகள் குறிப்பிட்டிருக்கவில்லை.

(உ) கூட்டுத்தாபன உறுவாக்கப்பட்ட அடிப்படைக் குறிக்கோள் சீமெந்து உற்பத்தி செய்து சந்தைப்படுத்துவதற்காக இருந்த போதிலும் 2016 அக்தோபர் 20 ஆம் திகதிய PE/RES/VRS - 1 - 2016 ஆம் இலக்கங் கொண்ட பொது முயற்சிகள் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் மீள்கட்டமைத்த பின்னர் நாட்டின் கிளின்கர் படிவுகளின் நம்பிக்கை பொறுப்பு கூட்டுத்தாபனத்திற்கு சாட்ப்பட்டிருந்தமையால் கூட்டுத்தாபனத்தில் உள்ள மீதியான ஊழியர்கள் 14 பேரை பயன்படுத்தி வாடகையை தீர்மானித்தல், காங்கேசன்துறையின் மீதிக் கணக்குகளுக்கு வாடகைக்கு கொடுத்தல் வாடகை உடன்படிக்கைகளை இற்றைவரைப்படுத்தல் ஆகிய விடயங்களை மேற்கொண்டு அந்த வருமானத்தின் மூலம் ஊழியர் ஊதியத்தை செலுத்திய பின்னர் மீதித் தொகையை அரசுக்கு அனுப்புகள் ஆகிய விடயங்கள் கூட்டுத்தாபனத்திற்கு காட்டப்பட்டிருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தின் சீமெந்து மற்றும் சீமெந்து உற்பத்திப் பொருட்களின் சந்தைப்படுத்துவதற்கான மூலம் 2016 ஆண்டின் போது கூட்டுத்தொகை ரூபா 2,304,013 இற்கான மொத்த நட்டமொன்று பெற்றிருந்தது.

(ஆ) 1967 ஜூலை 12 ஆம் திகதிய 14756/7 இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 288 ஆம் இலக்க காணி உறுதியின் மூலம் கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள 89.9 பர்சஸ் கொண்ட கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாகியிருந்தது. 2008 ஆண்டின் போது இலங்கை வங்கியில் இருந்து ரூபா 172,000,000 இற்கான உச்சமட்ட கடன் எல்லையின் கீழ் கடன்பெறுவதற்காக இந்தக் காணியை பிணையாக வைத்து 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 97,793,352 இற்கான கடன் தொகையொன்று பெறப்படவேண்டியிருந்தது. அதற்காக செலுத்த வேண்டிய வட்டி ரூபா 21,767,910 தொகையாக இருந்ததுடன் வங்கிக்குச் செலுத்த வேண்டிய மொத்தக் கடன் மற்றும் வட்டித்தொகை ரூபா 119,561,262 தொகையாக இருந்தது. இதன் பிரகாரம் நிதித்தட்டுப்பாடுகளின் காரணமாக கூட்டுத்தாபனத்தினால் இந்த காணியை தீர்த்துக் கொள்ளல் ஆபத்து நிலைமை ஒன்று காணப்பட்டது.

(இ) கூட்டுத்தாபனத்தினால் ரூபா 1,200,000 தொகைக்கு கொள்வனவு செய்திருந்த காலி உனவடுன கெஸ்பேபான வில் அமைந்துள்ள 06 ஏக்கர் காணி சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களை மீள் குடியேற்றுவதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. இந்த காணிகளுக்கு நட்டஈடு பெற்றுக்கொள்வதற்காக காலி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று விசாரணை செய்யப்பட்டு வருகின்றது.

(ஈ) கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காங்கேசன்துறையிலுள்ள தொடர் எணணெய் தாங்கிகள் இலங்கை பெற்றோலியம் மொத்த களஞ்சிய முடிவட கம்பனிக்கு வாடகைக்கு கொடுக்கப்பட்டதென கூறிய போதிலும் 2016 ஆண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காக இந்தக் கம்பனி அல்லது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் எழுத்துமூல உடன்படிக்கை ஒன்று கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.3 விளைவற்ற மற்றும் குறைவாக பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காங்கேசன்துறையில் அமைந்துள்ள சீமெந்து தொழிற்சாலை மற்றும் கட்டிட தொகுதி அமைந்துள்ள காணி 741 ஏக்கர்களை கொண்டிருந்ததுடன். அவற்றில் 297 ஏக்கர்கள் வர்த்தமானி அறிவித்தல் ஒன்றின் மூலம் கூட்டுத்தாபனத்திற்கு காட்டப்பட்டிருந்தது. மீதியாக உள்ள 444 ஏக்கர்கள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருக்காகதுடன், உரிமை தொடர்பாக எழுத்து மூலமான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்காததுடன் இந்த தொழிற்சாலை, கட்டிடங்கள் மற்றும் காணி என்பன உயர் பாதுகாப்பு வலையத்தில் தரைப்படையின் பொறுப்பில் நீண்ட காலமாக விளைவற்று காணப்பட்டது.

(ஆ) புத்தளம் மாவட்டத்தில் பாலாவியில் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 221 ஏக்கர் காணியில் 209 ஏக்கர்கள் காணி ஆக்கபூர்மான விடயம் ஒன்றிற்கும் ஈடுபடுத்துவதற்கு முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கூட்டுத்தாபனத்தினால் 1981 ஆம் ஆண்டு முதல் வரையறுக்கப்பட்ட லங்கா சீமெந்து கம்பனியின் பங்குகளில் ரூபா 1,083,618,910 தொகை முதலீடு செய்திருந்த போதிலும், 2016 ஆண்டு வரை எதுவித நலன்களும் கூட்டுத்தாபனத்திற்கு கம்பனியினால் வழங்கியிருக்கவில்லை.

## 4.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

2009 இன் 16 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டணம் (திருத்தி) சட்டத்தின் பிரகாரம் புரழ்வு காலாண்டிற்கு ரூபா 50 மில்லியன் தொகை அல்லது அதற்கு அதற்கு மிகைக்குமிடத்து மாத்திரம் பொருளாதார சேவைக் கட்டணத்திற்கான பொறுப்பு ஒன்று ஏற்படுகின்றது. 2013 மற்றும் 2014 இரண்டு ஆண்டுகளுக்காக 2015 ஆண்டின் போது ரூபா 54,191,154 தொகை மாத்திரம் கிடைத்திருந்த போதும் அந்த வருமானத்தின் அடிப்படைய ரூபா 163,388 தொகை பொருளாதார சேவை கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது. இந்தப் பணத்தை குறிப்பிட்ட உத்தியோகத்தர்களிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் 2016 ஆம் ஆண்டிற்கான ரூபா

27,399,370 வாடகைத் தொகையின் அடிப்படையில் ரூபா 129,211 தொகை பொருளாதார சேவைக்கட்டணம் என ஒதுக்கப்பட்டிருந்தது.

**4.6 பதவியணியினர் நிருவாகம்**

கூட்டுத்தாபனத்தின் 2016 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 76 ஆக இருந்தது. 2016 ஜுலை 31 திகதி சுயவிருப்பத்துடனான ஓய்வூதிய நட்டஈட்டுத் திட்டமொன்றின் மூலம் 36 ஊழியர்கள் ஓய்வு பெற்றிருந்ததுடன் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உள்ளபடியான பதவியணி 14 பேராக வரையறுக்கப்பட்டிருந்தது. சுயவிருப்பத்துடனான நட்டஈட்டுத் திட்டம் செயற்படுத்திய பின்னர் கூட்டுத்தாபனத்திற்காக முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

2003 ஜுன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதி வருடம் முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பிக்கப்பட வேண்டும் எனினும் கூட்டுத்தானத்தின் 2016 ஆண்டிற்கான இணைந்த நிதிக்கூற்று மற்றும் வரைவு வருடாந்த அறிக்கை 2017 ஜுன் 20 திகதி கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருந்தது.

**5.2 கூட்டிணைந்த திட்டம்**

பின்வரும் அவதானிப்புகளை மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 ஜுன் 02 ஆம் திகதிய பீஈடி/12 இலக்க கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பந்தியின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டத்தில் உட்படுத்தப்பட வேண்டிய நிறுவனத்தின் அமைப்பு வரைபடம், மனித வளங்கள் மற்றும் முகாமைத்துவ திறமை மற்றும் கடந்த 03 வருடங்களின் செயற்பாட்டு விளைவுகளின் மீளாய்வு ஆகிய முக்கிய விடயங்கள் அடங்கியிருக்கவில்லை.

(ஆ) மேற்கூறிய சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பிரிவின் பிரகாரம் பணிபாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த கூட்டிணைந்த திட்டம் நாளதுவரை

ஆக்கப்பட்ட பிரதிகள் பாதீட்டுடன் வரிசை அமைச்சு, பொது முயற்சிகள் திணைக்களம், திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஒவ்வொரு நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு குறைந்தளவு 15 நாட்களுக்கு முன்னர் சமர்பிக்கப்பட வேண்டும் எனினும், அதற்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5.3 செயல் நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 ஜுன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பிரிவு பிரகாரம் திட்டமிட்ட காலப்பகுதியில் நிறைவேற்றப்பட வேண்டிய குறிக்கோள்கள் மற்றும் இலக்குகள் தொடர்பான முகாமையாளர்களின் பொறுப்புக்கள் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் தெளிவாக காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டளவில் நிறுவனத்தின் முக்கிய குறிக்கோள் 50 கிலோகிராம் போட்லண்ட் சீமெந்து பைகள் இறக்குமதி செய்து விநியோகித்தல் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், கூட்டிணைந்ததிட்டம் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிட்டிருந்த இலக்கு பெறுமதியிடையே ரூபா 2,858,978 இற்கான வித்தியாசமொன்று காணப்பட்டது.

## 5.4 உள்ளகக் கணக்காய்வு

கூட்டுத்தாபனத்தின் 2016 ஆம் ஆண்டிற்கான முதல் அரை ஆண்டின் போது உள்ளகக் கணக்காய்வு பிரிவு ஒன்று நிறுவியிருந்த போதிலும் அதற்கு ஒரு பெண் உத்தியோகத்தர் மாத்திரம் இணைக்கப்பட்டிருந்தார். முதலாவது அரை ஆண்டின் போது கணக்காய்வு ஐயவினாக்கள் வழங்கியிருக்கவில்லை. அத்துடன் அந்த பெண் உத்தியோகத்தரும் 2016 ஜுன் முதல் சுயவிருப்ப ஓய்வு நட்டஈட்டுத்திட்டத்தின் கீழ் ஓய்வு பெற்றிருந்தார். இதன் காரணத்தினால் 2016 திசெம்பர் 31 திகதி அளவில் உள்ளகக்க கணக்காய்வுப் பிரிவு முற்றாக செயலிழந்து காணப்பட்டது.

## 5.5 கணக்காய்வு குழுக்கள்

2003 ஜுன் 02 திகதி பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிக் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பிரிவின் பிரகாரம் அவைகூட்டுநர் என தலைமை உள்ளக கணகாய்வாளருடன்

குறையந்த அளவு 03 வருடங்களுக்கு ஒரு முறை கணக்காய்வு குழு வீதம் ஆண்டின் போது 04 கணக்காய்வுக் குழுக்கள் நடத்தப்பட வேண்டுமெனினும், கூட்டுத்தாபனத்தினால் 2016 ஆண்டின் போது கணக்காய்வு குழுக் கூட்டங்கள் 04 மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

**5.6 பெறுகைகள் திட்டம்**

அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் பிரிவு 4.2 இன் பிரகாரம் 2016 ஆண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

**5.7 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டின் போது 08 செலவுத் தலைப்புக்களில் பாதீட்டு மற்றும் உள்ளவாறான செலவுகளில் 43 சதவீதம் முதல் 971 சதவீதம் வரை முரண்கள் காணப்பட்டதுடன், பாதீட்டு மதிப்பீடுகளுக்கான அங்கீகாரம் பெறாமல் 11 மீண்டுவரும் செலவுத் தலைப்புக்களில் கூட்டுத்தொகை ரூபா 18,925,523 இற்கான செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவர் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக் கப்பட்டது.

**5.8 வருடாந்த அறிக்கை சபையில் சமர்பித்தல்**

2003 ஜுன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 இலக்கங் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுள் இறுதி கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளுடன் கணக்காய்வு அறிக்கை மும்மொழிகளிலும் பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட வேண்டுமெனினும் 2015 ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்பிப்பதற்காக 2017 ஜுலை வரை அமைச்சுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**5.9 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடன் அடிப்படையில் சீமெந்து விற்பனை செய்வதற்காக விற்பனவு முகவர் நியமனம் வழங்கும் போது கடன் அடிப்படையில் வழங்கப்படும் பெறுமதிக்கு

ஏற்ற தொகையான பிணைமுறியொன்று பெற்றுக்கொள்ளல் மற்றும் கடன் வழங்கும் போது மற்றும் கடனை சேகரிக்கும் போது முகாமையினால் முறையான மற்றும் வினைதிறனுடன் நடைமுறையொன்று கடைபிடிக்காமையால் மீளாய்வாண்டு இறுதி வரையும் கூட்டுத்தொகை ரூபா 52,506,824 தொகைக்கான கடன் மீதிகளை அறவீடு செய்திருக்கவில்லை.

(ஆ) புத்தளம் மாவட்டத்தில் அருவக்காலு பகுதியில் அமைந்துள்ள 5352 ஏக்கர் சுண்ணாம்புக்கல் படிவு 1995 ஆம் ஆண்டின் போது சீமெந்து உற்பத்திக்காக சுண்ணாம்புக்கல் தோண்டுவதற்காக தனியான கம்பனி ஒன்றிற்கு 50 வருட காலப்பகுதிக்காக குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. குத்தகை ஒப்பந்தத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது அறவிடப்பட வேண்டிய வருடாந்த வாடகை 202.804 அமெரிக்க டொலர்களுக்கு சமமான ரூபா 26,851,358 பெறுமதியாகும். எவ்வாறாயினும் வருடாந்த வாடகையை திருத்தி அமைத்தல் தொடர்பாக பிரிவு உட்படுத்தப்பட்டிருக்காமையால் 2011 ஆகஸ்ட் 16 ஆம் திகதி கூடிய பொது முயற்சி தொடர்பான பாராளுமன்ற தெரிவுக்குழு கூட்டத்தில் இந்த வாடகை உடன்படிக்கையை திருத்தும்படி ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும் அதன்படி செயற்பட்டிருக்காததுடன் இந்தக் காணியினை பெறுமதி மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களுக்கு எடுப்பதற்கு முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்த வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) கணக்கீடு | (i) | நிறுவனத்தில் பேரேடுக் கணக்குகள், ஏடுகள், ஆவணங்கள் நாளதுவரை பேணப்பட்டி ருக்காமை. |

| | | | |
|---|---|---|---|
| | | (ii) | நிறுவனத்தினால் பிரதான நாட்குறிப்பு பேணப்பட்டிருக்காமை. |
| (ஆ) | நிலையான சொத்துக் கட்டுப்பாடு | (i) | சொத்துக்கள் பதிவேடு உரிய முறையில் பேணப்படாமை. |
| | | (ii) | கணக்கீட்டு சபை நியமனம் செய்தல் மற்றும் கணிப்பீடு செய்தல் தாமதித்தல். |
| (இ) | களஞ்சிய கட்டுப்பாடு | | சீமெந்து இருப்புக்களைப் பேணல், களஞ்சியப்படுத்தல் மற்றும் இருப்பு அறிக்கைகள் பேணல் தொடர்பாக முறையான கவனம் செலுத்தப்படாமை. |
| (ஈ) | கடன்பட்டோர் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு | (i) | நிலுவை கடன்மீதி அறவீடு செய்யப்படாமை. |
| | | (ii) | செலுத்த வேண்டிய மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை. |

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எச்.எம். காமினீ விஜேசிங்க
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

**2016 டிசெம்பர் 31 ம் திகதியன்று**

**ஒன்றிணைந்த நிதியில் தன்மையின் அறிக்கை**

| சொத்துக்கள் | குறிப்புக் கள் | 2016 ஸ்ரீலசீகூ | 2015 ஸ்ரீலசீகூ | 2016 ஒன்றிணை. | 2015 ஒன்றிணை. | 2016 துணைநிலைக் கம்பனி |
|---|---|---|---|---|---|---|
| **நடைமுறைச் சொத்துக்கள் அல்லாதவை** | | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** |
| உடமை,யந்திரம் மற்றும்சாதனங்கள் | 03 | 3,886,969 | 4,172,782 | 234,116,375 | 259,720,041 | 230,229,406 |
| உடமையான்மைகளில் முதலீடுகள் | 04 | 773,700,000 | 773,700,000 | 773,700,000 | 773,700,000 | - |
| நீண்டகால வருமதிகள் | 05 | - | 757,223,883 | - | - | - |
| முதலீடுகள் | 06 | 629,225,138 | 897,927,959 | 11,562,359 | 41,869,020 | - |
| | | **1,406,812,107** | **2,433,024,624** | **1,019,378,734** | **1,075,289,061** | **230,229,406** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | | |
| பொருட்கள் | 07 | 3,099,678 | 8,593,926 | 6,288,349 | 13,065,325 | 3,188,671 |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | 08 | 89,212,053 | 80,500,613 | 109,794,476 | 94,355,791 | 20,582,423 |
| பணமும் பணத்துக்கு நிகரானவையும் | 09 | 13,687,035 | 8,743,454 | 34,937,430 | 9,811,954 | 21,250,395 |
| | | **105,998,766** | **97,837,993** | **151,020,255** | **117,233,070** | **45,021,395** |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **1,512,810,873** | **2,530,862,617** | **1,170,398,989** | **1,192,522,131** | **275,250,895** |
| **உரிமை மற்றும் பொறுப்புக்கள்** | | | | | | |
| **ஊரிமை** | | | | | | |
| குறிப்பிட்ட மூலதனம் | | 966,971,845 | 966,971,845 | 966,971,845 | 966,971,845 | 1,735,107,480 |
| பொது ஒதுக்கங்கள் | | 9,996,952 | 9,996,952 | 9,996,952 | 9,996,952 | - |
| மீள் பெறுமதியிடப்பட்ட ஒதுக்கங்கள் | | 536,119,419 | 536,119,419 | 536,119,419 | 536,119,419 | - |
| வைத்திருந்த வருமாணம் | | (210,289,522) | 515,533,518 | (1,822,330,515) | (1,848,352,455) | (2,369,264,876) |
| விற்பனைக்குத் தயாரகவுள்ள ஒதுக்கங்கள் | | (465,956,132) | (227,559,971) | - | - | - |
| | | **836,842,562** | **1,800,761,763** | **(309,242,299)** | **(335,264,239)** | **(634,157,396)** |
| **கட்டுக்கடந்த வட்டிகள்** | | - | - | 651,488,569 | 651,488,569 | - |
| **மொத்த உரிமை** | | **836,842,562** | **1,800,761,763** | **342,246,270** | **316,224,330** | **(634,157,396)** |
| **நடைமுறைப் பொறுப்புக்கள் அல்லாதவை** | | | | | | |
| பொறுப்புக்களால் தோன்றியுள்ள வட்டி | 10 | - | 8,000,000 | - | 8,000,000 | - |
| நீண்டகால செலுத்துமதிகள் | 11 | 492,426,190 | 492,426,190 | 492,426,190 | 492,426,190 | 757,223,883 |
| விடுபட்ட ஓய்வுகால சலுகைகள் | 12 | 3,297,663 | 18,696,935 | 5,092,094 | 23,837,538 | 1,794,431 |
| பிற்போடப்பட்ட வருமாணம் | 13 | - | - | 74,197,970 | 74,197,970 | 74,197,970 |
| | | **495,723,853** | **519,123,125** | **571,716,254** | **598,461,698** | **833,216,284** |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | | | |
| வியாபார செலுத்துமதிகள் | 14 | 46,502,070 | 81,304,754 | 120,198,304 | 145,800,099 | 73,696,234 |
| தற்போதைய நிலைவரம் பொறு தோ வட்டி | 10 | 119,561,262 | 101,020,284 | 119,561,262 | 101,020,284 | - |
| பணமும் பணத்துக்கு நிகரானவையும் | 09 | 14,181,126 | 28,652,691 | 16,676,899 | 31,015,720 | 2,495,773 |
| | | **180,244,458** | **210,977,729** | **256,436,465** | **277,836,103** | **76,192,007** |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **675,968,311** | **730,100,854** | **828,152,719** | **876,297,801** | **909,408,291** |
| **மொத்த உரிமையான்மை மற்றும் பொறுப்புக்கள்** | | **1,512,810,873** | **2,530,862,617** | **1,170,398,989** | **1,192,522,131** | **275,250,895** |

அடைப்புக்குள் இருக்கும் எண்கள் கழிக்வேண்டும் என்பதை பிரதிபலிக்கின்றது.

கணக்கியல் கொள்கையின் பக்கங்களில் …. to … மற்றும் குறிப்புக்களின் பக்கங்களில் … to … இவ் நிதியியல் அறிக்கைகள் முழுமையின் ஒரு பகுதியில் இருந்து

***கையொப்பம்,***

**எம்.ஜி.ஏ.ரி.ஆர்.ஜெயதிலக**

**கணக்காளர்**

இவ் நிதியியல் அறிக்கை தயாரித்தல் மற்றும் சமர்ப்பிப்பது பணிப்பாளர் சபையின் பொறுப்பும் கடமையுமாகும். இவ் நிதியியல் அறிக்கை பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு சபையின் சார்பில் பணிப்பாளர்கள் கையொப்பம் இட்டுள்ளனர்.

***கையொப்பம்,***
**எம்.அப்துர்ராபிக்**

**பணிப்பாளர்**

***கையொப்பம்,***
***குசேயின் அகமட்பயிலா,***

**தலைவர்**

**11ஒக்டோபர்,2017**

**ஸ்ரீலங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனம்**

**2016 டிசெம்பர் 31 ம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான ஒன்றிணைந்த பரந்த வருமாணம் மற்றும் பிடித்துவைத்த அறிக்கை**

**மீள் குறிப்பிட்ட**

| | குறிப்பு | 2016 ஸ்ரீலசீகூ ரூபா. | 2015 ஸ்ரீலசீகூ ரூபா. | 2016 ஒன்றிணை ரூபா. | 2015 ஒன்றிணை ரூபா. | 2016 துணைநிலை கம் ரூபா. |
|---|---|---|---|---|---|---|
| வருமாணம் | **15** | 64,220,735 | 40,570,803 | 174,082,698 | 94,747,914 | 111,688,170 |
| விற்பனைப் பெறுமதி | **Sta.I** | (66,524,748) | (50,781,481) | (173,224,405) | (99,644,640) | (108,525,864) |
| **மொத்த இலாபம்t/(நட்டம்)** | | **(2,304,013)** | **(10,210,678)** | **858,293** | **(4,896,726)** | **3,162,306** |
| ஏனைய வருமாணம் | **16** | 91,541,806 | 60,043,458 | 124,175,893 | 73,883,163 | 32,634,087 |
| வினியோகச் செலவீனங்கள் | **கட்டம்.II** | (292,125) | (1,198,403) | (5,000,825) | (1,205,443) | (4,708,700) |
| நிர்வாகச் செலவீனங்கள் | **கட்டம்.III** | (41,171,722) | (30,460,889) | (77,812,976) | (57,469,817) | (36,641,254) |
| நிதிப் பெறுமதி | **17** | (15,703,919) | (15,334,407) | (15,829,261) | (15,443,645) | (125,342) |
| **வரிக்கு முன்னரான இலாபம்/(நட்டம்)** | | **32,070,027** | **2,839,081** | **26,391,124** | **(5,132,468)** | **(5,678,903)** |
| வருமாணவரிச் செலவீனம் | | (369,184) | (255,464) | (369,184) | (332,007) | - |
| **இவ்வருட இலாபம்/(நட்டம்)** | | **31,700,843** | **2,583,617** | **26,021,940** | **(5,464,475)** | **(5,678,903)** |
| **திரட்டப்பட்ட ஏனைய வருமாணம்/(செலவீனங்கள்)** | | | | | | |
| நிதியியல் சொத்துகளின் மீதான சம்பாத்தியம் | **19** | (995,620,044) | 140,870,459 | - | - | - |
| **திரட்டப்பட்ட மொத்த வருமாணங்கள் /(செலவீனங்கள்)** | | **(963,919,201)** | **143,454,076** | **26,021,076** | **(5,464,475)** | **(5,678,903)** |
| வருட ஆரம்பத்தில் வைத்திருந்த வருமாணம் | | 287,673,547 | 144,219,471 | (1,848,352,455) | (1,842,887,980) | (2,363,585,973) |
| **வருட இறுதியில் வைத்திருந்த வருமாணம்** | | **(676,245,654)** | **287,673,547** | **(1,822,330,515)** | **(1,848,352,455)** | **(2,369,264,876)** |

**திரட்டப்பட்ட மொத்த வருமாணம்/(செலவீனங்களின் பகுதியாக கொள்ளப்பட்ட முன்னைய**

| | |
|---|---|
| உரிமையாளர் | (3,546,475) |
| கட்டுக்கடங்காத வட்டிகள் | (2,132,428) |
| | **(5,678,903)** |

அடைப்புக்குள் இருக்கும் எண்கள் கழிக்வேண்டும் என்பதை பிரதிபலிக்கின்றது.

கணக்கியல் கொள்கையின் பக்கங்களில் .... வரை ... மற்றும் குறிப்புக்களின் பக்கங்களில் ... வரை ... இவ் நிதியியல் அறிக்கைகள் முழுமையின் ஒரு பகுதியில் இருந்து

31 டிசெம்பர் 2016 முடிவடைந்த ஆண்டுக்கான

ஒன்றிணைந்த மாற்றங்களுக்கான உண்மை அறிக்கை

| ***ஒன்றிணைக்கப்பட்டது*** | 01.01.2015 இல் உள்ள மிதிகள் | ஆண்டு (2015) | 31.12.2015 இல் உள்ள மிதிகள் | இவ் வருடம் (2016) | 31.12.2016 இல் உள்ள மிதிகள் |
|---|---|---|---|---|---|
| பங்களிப்புச் செய்யப்பட்ட மூலதனம் | | | | | |
| - உரிமையாளர் தாய்க் கம்பனி | 966,971,845 | - | 966,971,845 | - | 966,971,845 |
| - கட்டுப்படுத்த முடியாத வட்டிகள் | 651,488,569 | - | 651,488,569 | - | 651,488,569 |
| பொது ஒதுக்கங்கள் | 9,996,952 | - | 9,996,952 | - | 9,996,952 |
| மீள்மதிப்பளிக்கப்பட்ட ஒதுக்கங்கள் | 536,119,419 | - | 536,119,419 | - | 536,119,419 |
| வைத்திருந்த இலாபம் | (1,842,887,980) | (5,464,475) | (1,848,352,455) | 26,021,940 | (1,822,330,515) |
| **மொத்தம்** | **321,688,805** | **(5,464,475)** | **316,224,330** | **26,021,940** | **342,246,270** |

| ***ஸ்ரீலங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனம்*** | 01.01.2015 இல் உள்ள மிதிகள் | ஆண்டு (2015) | 31.12.2015 இல் உள்ள மிதிகள் | இவ் வருடம் (2016) | 31.12.2016 இல் உள்ள மிதிகள் |
|---|---|---|---|---|---|
| பங்களிப்புச் செய்யப்பட்டமூலதனம் | 966,971,845 | - | 966,971,845 | - | 966,971,845 |
| பொது ஒதுக்கங்கள் | 9,996,952 | - | 9,996,952 | - | 9,996,952 |
| மீள் மதிப்பளிக்கப்பட்ட ஒதுக்கங்கள் | 536,119,419 | - | 536,119,419 | - | 536,119,419 |
| வைத்திருந்த இலாபம் | 512,649,901 | 2,583,617 | 515,233,518 | (725,523,040) | (210,289,522) |
| விற்பனைக்கு தயாரகவுள்ள ஒதுக்கங்கள் | (368,430,430) | 140,870,459 | (227,559,971) | (238,396,161) | (465,956,132) |
| **மொத்தம்** | **1,657,307,687** | **143,454,076** | **1,800,761,763** | **(963,919,201)** | **836,842,562** |

அடைப்புக்குள் இருக்கும் எண்கள் கழிக்வேண்டும் என்பதை பிரதிபலிக்கின்றது.

கணக்கியல் கொள்கையின் பக்கங்களில் ….வரை … மற்றும் குறிப்புக்களின் பக்கங்களில் … வரை … இவ் நிதியியல் அறிக்கைகள் முழுமையின் ஒரு பகுதியில் இருந்து

**ஸ்ரீலங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனம்**
**காசுப்பாய்ச்சல் அறிக்கை**
**2016 டிசெம்பர் 31 முடிவடைந்த ஆண்டுக்கானது**

| | குறிப்புக்கள் | 2016 ஸ்ரீலசீகூ ரூபா. | 2015 ஸ்ரீலசீகூ ரூபா. | 2016 ஒன்றிணை ரூபா. | 2016 துணைநிலைகம் ரூபா. |
|---|---|---|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | | | | |
| இவ் வருட இலாபம் /(நட்டம்) | | 32,070,027 | 2,583,617 | 26,391,124 | (5,678,903) |
| **பணம் அல்லாத வருமாணம் மற்றும் செலவீனங்களுக்கான சீராக்கல் :** | | | | | |
| உடமை,யந்திரம் மற்றும் சாதனங்கள் தேய்மானம் | 08 | 318,519 | 1,457,422 | 5,761,551 | 5,443,032 |
| பணிக்கொடை ஒதுக்கம் | 12 | 3,408,375 | 923,388 | 7,103,845 | 3,695,470 |
| கடந்த வருட சீராக்கங்கள் | | - | (347,072) | (1,337,262) | (1,337,262) |
| வைப்புக்கள் மீதான வட்டி | | (1,718,277) | (2,269,769) | (737,615) | 980,662 |
| ESC செலவீனங்கள் | | 1,065,027 | - | 1,246,185 | 181,158 |
| ஒதுக்கங்கள் | | - | - | 175,442 | 175,442 |
| இருப்பு இழப்புக்கள் | | 129,812 | - | 129,812 | - |
| நிலையான சொத்துக்கள் விற்பனை இலாபம் | | (9,220,284) | - | (9,220,284) | - |
| **காசுப்பாய்ச்சலில் உள்ளடக்கப்பட்ட தொழிற்பாட்டு நடவடிக்கைகள்** | | **26,053,199** | **2,347,586** | **29,512,798** | **3,459,599** |
| **சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் தொழிற்பாட்டு மாற்றங்கள்** | | | | | |
| பொருட்களில் வீழ்ச்சி/ (அதிகரிப்பு) | **11** | 5,494,248 | 9,752,318 | 6,776,976 | 1,282,728 |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகளில் வீழ்ச்சி /( அதிகரிப்பு ) | **12** | (8,711,440) | 17,457,288 | (15,438,685) | (6,727,245) |
| வங்கிக்கடன் வட்டிகள் செலுத்துமதிகளில் அதிகரிப்பு /( வீழ்ச்சி) | **10** | 10,540,978 | - | 10,540,978 | - |
| வியாபார செலுத்துமதிகளில் அதிகரிப்பு /( வீழ்ச்சி) | **17** | (34,802,684) | 24,814,508 | (25,601,794) | 9,200,890 |
| | | **(1,425,699)** | **54,371,700** | **5,790,273** | **7,215,972** |
| கழி : | | | | | |
| செலுத்திய பணிக்கொடை | **16** | (17,583,390) | (1,620,278) | (24,625,032) | (7,041,642) |
| செலுத்திய வருமாணவரி | | (163,388) | - | (163,388) | - |
| **தொழிற்பாட்டு நட்வடிக்கைகளில் இருந்து தேறிய காசுப்பாய்ச்சல்** | | **(19,172,477)** | **(57,751,422)** | **(18,998,147)** | **174,330** |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து காசுப்பாய்ச்சல்** | | | | | |
| சாதனங்கள் கொள்வனவு | **08** | (121,752) | (18,180) | (246,931) | (125,179) |
| நிலையான சொத்துக்கள் விற்பனை | | 8,008,050 | - | 8,008,050 | - |
| ஏனைய சொத்துக்கள் விற்பனை | | 190,400 | - | 190,400 | - |
| பொருட்கள் விடுவிப்பு | **06** | 32,229,016 | - | 32,229,016 | - |
| முதலீடுகளில் முதலீடு | **06** | (1,718,277) | 228,973 | 18,281,723 | 20,000,000 |
| **முதலீட்டு நடவடிக்கைக்கு உபயோகித்த தேறிய பணம்** | | **38,587,437** | **210,793** | **58,462,258** | **19,874,821** |
| **நிதியியல் நடவடிக்கையில் இருந்து காசுப்பாய்ச்சல்** | | | | | |
| பெறப்பட்ட கடன் & மீள் செலுத்தியது | **10** | - | 5,018,545 | - | - |
| நீண்டகால செலுத்துமதிகள் செலுத்தியது | **10** | - | (27,066,287) | - | - |
| **நிதியியல் நடவடிக்கையில் உபயோகித்த தேறிய பணம்** | | **-** | **(22,047,742)** | **-** | **-** |
| **பணம் மற்றும் பணத்துக்கு நிகரானவை தேறிய அதிகரிப்பு/(வீழ்ச்சி)** | | **19,414,960** | **30,914,473** | **39,464,111** | **20,049,151** |
| வருட தொடக்கத்தில் பணம் மற்றும் பணத்துக்கு நிகரானவை. | | (19,909,051) | (50,823,524) | (21,203,580) | (1,294,529) |
| **வருட இறுதியில் பணம் மற்றும் பணத்துக்கு நிகரானவை** | | **(494,091)** | **(19,909,051)** | **18,260,531** | **18,754,622** |

அடைப்புக்குள் இருக்கும் எண்கள் கழிக்வேண்டும் என்பதை பிரதிபலிக்கின்றது.

கணக்கியல் கொள்கையின் பக்கங்களில் …. வரை … மற்றும் குறிப்புக்களின் பக்கங்களில் … வரை … இவ் நிதியியல் அறிக்கைகள் முழுமையின் ஒரு பகுதியில் இருந்து

## 1. பொதுவான தகவல்கள்

1950 ம் ஆண்டின் கைத்தொழில் திணைக்களத்தின் கீழ் சீமெந்துத் தொழிற்சாலை காங்கேசன்துறையில் தாபிக்கப்பட்டு,1955 ம் ஆண்டின் 19 ம் இலக்க கூட்டுத்தாபனச் சட்டத்திற்கு அமைய பொதுக் கூட்டுத்தாபனமாக அரசாங்கத்தால் முழுமையான ஒதுக்கத்துடன் காங்கேசன் சீமெந் வேக்ஸ் எனப் பெயரிடப்பட்டது. 1956 ம் ஆண்டு காங்கேசன் சீமெந்து வேலைகள் ஆரம்பிக்கப்பட்டது.

1980 ம் ஆண்டு ''ஸ்ரீலங்கா சீமெந்து கூட்டுத்தாபனம்'' என வர்த்தமானி அறிவித்தல் மூலம் பெயர் மாற்றப்பட்டது. தலைமை காரியாலயத்தின் வியாபார முகவரி இல.130 டபிள்யு.ஏ.டி.ராமநாயக்க மாவத்த கொழும்பு – 02 .2015 யூலை வரை பின்னரான முகவரி மாற்றம் இல.27, வொக்சோல் மன்சன், வொக்சோல் வீதி கொழும்பு – 02.

தற்போதைய நடவடிக்கைகளாவன சாதாரண பொட்லண்ட் சீமெந்துப் பொதிகளை அறக்குமதி செய்தலும் விற்பனை செய்தலும் மற்றும் கொங்கிறீற் உற்பத்திகளை உற்பத்தி செய்தலும் அதன் அடிப்படை நடவடிக்கையும்.

ஸ்ரீலங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் உடனடி மற்றும் முடிவாக உள்ள கம்பனி லங்கா சீமெந் பிஎல்சி யாகும்.

## 2. கணக்கியல் கொள்கைகளின் சிறப்பான அறிக்கை

இவ் நிதியில் அறிகைகள் தயாரிப்பதற்கு பிரயோகிக்கப்பட்ட அடிப்படை கணக்கியல் கொள்கை கீழ் வருமாறு. இவ் கொள்கைகள் யாவும் ஒவ்வொரு வருடமும் சமர்ப்பிக்கப்பட்டவை அல்லது கடந்த காலங்களில் சீராக பிரயோகிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டவை.

### 2.01 தயாரித்தலின் அடிப்படை

இவ் நிதியியல் அறிக்கையானது ஸ்ரீலங்கா பட்டயக்கணக்காளர் நிறுவனத்தால் வினியோகிக்கப்பட்ட ஸ்ரீலங்கா கணக்கியல் நியமத்துக்கு அமைவாக தயாரிக்கப்பட்டது.. இவ் நிதியியல் அறிக்கைகள் ஸ்ரீலங்கன் ரூபாய் மற்றும் சகல நிதியியல் தகவல்கள் ஸ்ரீலங்கன் ரூபாய்களில் கிட்டத்தட்ட கிட்டிய ரூபாய்களில் தயாரிக்கப்பட்டு சமாப்பிக்கப்பட்டுள்ளது.

### 2.1.1 நடைபெற்றுக் கொண்டிருக்கும் நடைமுறை

கூட்டுத்தாபனத்தை தொடா்ந்தும் திறம்பட கொண்டுசெல்வதற்கு ஒரு மதிப்பீட்டை பணிப்பாளா்கள் மேற்கொள்வதுடன் அவா்கள் வியாபாரத்தை நிறுத்துவதா அல்லது திரவநிலைமையில் தொடா்ந்தும் செயற்படுத்தமால் இருப்பதா என்று ஆலோசிக்கிறாா்கள்.

### 2.2 இணைகள் மற்றும் துணைநிலைகளில் முதலீடுகள்

#### 2.2.1 துணைநிலைகள்

ஸ்ரீலங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனம் ரூபா.1,083,618,910 /=வை 1981 ம் ஆண்டில் லங்கா சீமெந்து லிமிட்டெட்டில் முதலிட்டதில் 62.45% பங்கு ரூலதனத்தைக் கொண்டுள்ளது. அந்தப் பங்கின் முகப்பெறுமதி 10 /=. இந்த முதலீட்டில் இருந்து அதன் பரிசீலனையின் போது எவ்வித பிரதிபலனையும் பெற்றிருக்கவில்லை.

இணைகளில் முதலீடுகள் யாவும் கணக்கிடப்பட்டு நிதியியல் சொத்துக்கள் விற்பனையில் தயாரக உள்ளன.விற்பனைக்கு தயாராகவுள்ள நிதியியல் சொத்துக்கள் மீதான தருவிக்கப்பட்ட நட்டம் இனங்காணப்பட்டது நோ்மையான இலாபம் அல்லது நட்ட ஒதுக்கத்தில் சந்தைப் பெறுமதியில் திரண்டநட்டங்களால் மீள வகைப்படுத்தப்பட்டது. ஆவை ஒரு திரட்டப்பட்ட நட்டங்கள் .

இணைகளில் முதலீட்டில் இருந்து பங்குலாப வருமாணம் எப்பொழுதும் கூட்டுத்தாபனம் முறையாக பெற்றவையே நிலைநாட்டப்பட்டது. அது ஒரு ஏனைய வருமாணங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது..

## 2.03 அடையாளம் காணப்பட்ட வருமாணம்

சீமெந்துப் பொதிகளை கொள்வனவு செய்து விற்பனை செய்தல் மற்றும் கொங்கிறீற் பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்வதில் இருந்து கொண்டுவரப்படும் வருமாணம் அடையாளம் காணப்பட்டது அது கம்பனியின் பாய்ச்சலை பொருளாதார ரீதியாக சாதகமானதுடன் அறிக்கையின் இறுதியில் அளவிட்டதில் நம்பிக்கைக்குரியது உள்ளாக்கப்பட்ட பெறுமதியை ஈடுபடுத்த அல்லது தோன்றுவதை தடுக்க சலுகையாக அமையும். வருமானமானது வியாபாரக் கழிவு மற்றும் விற்பனை வரிகள் இல்லாத தேறிய வருமதிகள் உறுதிப்படுத்தப்பட் பெற்ற உண்மைப் பெறுமதிக்கே அளவிடப்பட்டது. பின்வரும் குறிப்பிடத்தக்க அளவுகோளை உபயோகிப்பதன் நோக்கம் வருமாணத்தை ஒத்துக்கொள்வதற்கே.

### a) சரக்குகள் விற்பனை

சரக்கு விற்பனையில் இருந்து வருமாணம் எப்பொழுதும் கொள்வனவாளர்களுக்கு சரக்குகளை அனுப்பி உரிமையை வென்றெடுப்பது, சரக்குகளை சாதாரணமாக அனுப்புவது எல்லாம் தனிச்சிறப்பு வாய்ந்ததாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது..

### b) நடைமுறைப்படுத்தப்பட்ட சேவைகள்

நடைமுறைப்படுத்தப்பட்ட சேவைகளில் இருந்து வருமாணம் நிறைவு செய்யப்பட்ட கட்டம் தொடர்பால் அடையாளப்படுத்தப்படும் கணக்குகளில் எடுப்பதற்கு தோன்றியுள்ள திகதியில் எடுத்த தொழிலாளர் மணித்தியாலங்களால் முடிவுசெய்யப்பட்டது ஒவ்வொரு ஒப்பந்தத்துக்கும் எதிர்பார்க்கப்பட்ட மொத்த தொழிலாளர் மணித்தியாலங்கள். ஏங்கேயாவது வெளிவருதல் ஒப்பந்தம் நம்பத்தகுந்த அளவீடாகாது, தோன்றியுள்ள நீடிக்கப்பட்ட செலவீனங்கள் யாவும் அறவிடப்பட வேண்டியவையாக மட்டும் வருமாணம் வகைப்படுத்தப்பட்டது..

### c) வட்டி

சொத்துகள் மீதான வட்டி விகிதம் அவற்றை கணக்குளில் எடுத்த காலத்தில் வீதாசாரத்தின் அடிப்படையில் வருமாணம் அடையாளப்படுத்தப்படும்

### d) ஏனையவை

ஏனைய வருமாணம் ஒரு கொடுபடவேண்டியதன் அடிப்படையில் அடையாளப்படுத்தப்படும்.

## 2.04 அரசாங்க மாணியங்கள்

**இயற்கை மாணியம் மற்றும் சிறிய வருமாணம்**

மாணியம் மற்றும் உதவிகள் நிறுவனத்தில் தோன்றியுள்ள செலவீனங்களை அவை ஈடுசெய்வதற்காக ஒரு முறைமையின் அடிப்படை மீது ஒன்றிணைக்கப்பட்டு வருமாண அறிக்கை காலத்தில் அச் செலவீனங்கள் யாவும் அடையாளப்படுத்தப்பட்டு வருமாணமாக அடையாளப் படுத்தப்படும்.

## 2.05 கடனாகப் பெறப்பட்ட பெறுமதி

சகல கடனாக பெறப்பட்ட பெறுமதிகள் யாவும் இலாபம் அல்லது நட்டம் அவை தோன்றியுள்ள காலத்தினால் அடையாளப்படுத்தப்படும்.

## 2.06 வருமாணவரி

வருமான வரிச் செலவீனம் தற்பொழுது செலுத்த வேண்டிய வரித் தொகையை உறுதிப்படுத்துகிறது.

தற்போதைய செலுத்துமதிகள் இவ் வருட வரிலாபத்தின் அடிப்படையில்

## 2.07 உடமை,யந்திரங்கள் மற்றும் சாதனங்கள்

ஆதன உருப்படிகள், யந்திரம் மற்றும் சாதனங்கள் அளவிடுகை குறைந்து செல்லும் பெறுமதியின் அடிப்படையில் தேய்மாணம் கணிப்பிடுவதுடன் எந்த உருவாக்கப்பட்ட நட்டங்கள் திரட்டப்பட்டுத

தேய்மானமானது சொத்துக்களின் குறைந்துசெல்லும் பெறுமதி மற்றும் அதன் எதிர்பாக்கப்பட்ட வாழ்க்கைக் காலத்தின் அடிப்படையில் நேரடி முறையில் கணிக்கப்படும். பினவரும் வருடாந்த விதத்தில் சொத்துக்கள்,யந்திரங்கள் மற்றம் சாதனங்கள் தேய்மாணம் கணிக்கப்படும்.

| | | |
|---|---|---|
| கட்டிடம் | 6.67 | % |
| யந்திரங்கள் & இயந்திரங்கள் | 12.50 | % |
| மண் அசைவு & கடின சாதனங்கள் | 25.00 | % |
| மோட்டார் வாகனங்கள் | 25.00 | % |
| உதிரி கருவிகள் & நடமாடும் சாதனங்கள் | 25.00 | % |
| பொருத்து பொருத்துக்கள் & தளபாடங்கள் | 25.00 | % |
| புகையிரத &வீதி போக்குவரத்துக்கள் | 10.00 | % |

பாவனைக்காலம் அல்லது எஞ்சியுள்ள ஒரு சொத்தின் பெறுமதிக்கே தேய்மாண விகிதத்தில் ஒரு சிறப்பான மாற்றம் அங்கே குறிப்பிடப்படுமாகின்,அந்த சொத்துக்களின் தேய்மாணம் எதிர்காலத்தில் புதிய எதிர்பார்ப்பபை பிரதிபலிக்கும்.

ரூபா. 10,000 பெறுமதிக்கு குறைவான பெறுமதியுள்ள கருவிகள்,பொருத்து மற்றும் நிலையான பொருத்துக்கள் மூலதனமாக கொள்ளப்படாது கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டின் ஒரு செலவீனமாக கணிக்கப்படும்.

## 2.08 ஆதனங்களில் முதலீடு

### A. அறுவாக்காலுவில் உள்ள நிலம்

ஸ்ரீலங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனம் அறுவாக்காட்டில் உள்ள சுண்ணாம்புக் கல் வைப்பு நிலம் 5,352 ஏக்கரை கொல்சிம் (லங்கா) லிமிட்டெட்டற்கு 1993 ம் ஆண்டு 50 வருட குத்தகைக்கு சீமெந்து உற்பத்திக்கு வழங்கியது.

சொல்லப்பட்ட அறுவாக்காட்டு நிலம் மதிப்பீட்டுத் திணைக்களம் வேண்டுகோளுக்கு அமைய மதிப்பிடப்பட்டு அதனை நிதியில் அறிக்கைகளில் உள்ளடக்க மதிப்பீட்டு நடவடிக்கைகள் முடிவுற்றதன் பிற்பாடு எடுக்கப்படும்.

### B. கொழும்பு 03 மற்றும் காலியில் உள்ள காணிகள்

வாடகை வருமாண சம்பாத்தியம் அல்லது மூலதன மதிப்பீடுகளை அல்லது இரண்டையும் சொத்துக்களில் முதலீட்டையோ சொத்தையோ நிறுத்தும், ஆனால் சாதாரண வியாபார நடவடிக்கைகளில் உற்பத்திப் பாவனை அல்லது இருப்புக்கள் அல்லது சேவைகள் வினியோகம் அல்லது நிர்வாக நோக்கங்களுக்கு விற்பனையை நிறுத்தாது,

நிறுவனம் சொத்துக்கள் முதலீட்டு அளவீட்டு முறைமையில் சரியான பெறுமதியை தெரிவுசெய்யும் முதலீட்டுச் சொத்துக்கள் எந்த வலிமையிழந்த நட்டங்கள் குறைந்த பெறுமதி கருதுகோள்கள் அளவிடப்படட்ட நிகழ்வு இடம்பெறவில்லை.

## 2.09 குத்தகைகள்

வகைப்படுத்தப்பட்ட குத்தகை யாவும் எப்பொழுதும் நிதிக் குத்தகை குத்தகை பரிமாற்ற நிபந்தனையை உறுதியான சகல பழுவையும் கம்பனியின் குத்தகைச் சொத்து உரிமையான்மையை வெற்றிகொள்வது. ஏனைய சகல குத்தகைகள் யாவும் தொழிற்பாட்டு குத்தகையாக வகைப்படுத்தப்பட்டது.

நிதிக் குத்தகையின் கீழ் உள்ளவை யாவும் சரியான சொத்துக்களாக கம்பனியின் குத்தகைச் சொத்தின் உண்மைப் பெறுமதியாக காணப்பட்ட குத்தகைச் சொத்து( தற்போதைய குறைந்த குத்தகைக் கொடுப்பனவுப் பெறுமதி அல்லது குறைவானால்) குத்தகையை பரிட்சிக்க வேண்டும். குத்தகை விடுபவர் தொடர்பான பொறுப்புக்கள் நிதியியல் நிலைவர அறிக்கையில் அடங்கியுள்ள ஒரு நிதிக் குத்தகைப் பொறுப்பாகும். குத்தகை கொடுப்பனவு யாவும் நிதிக்கட்டணங்கள் மற்றும் குத்தகைப் பொறுப்பு கழிப்பனவுகளுக் கிடையில் பகுக்கப்பட்து எனவே ஒரு மாறாத வட்டி விகிதத்தை எஞ்சியதை செய்துமுடிக்க மீதியாகவுள்ள பொறுப்புக்கள். நிதிக் கட்டணங்கள் யாவும் இலாபம் மற்றும் நட்டத்தின் அளவீட்டைக் குறைக்கும். நிதிக் குத்தைகையில் உள்ளடக்கப்பட்ட சொத்து யந்திரங்கள் மற்றும் சாதனங்கள் மற்றும் தேய்மானங்கள் மற்றும் மதிப்பிடப்பட்ட வலிமை இழந்த நட்டங்கள் மற்றும் இதேமாதியான சொந்த சொத்து நட்டங்கள்.

தொழிற்பாட்டு குத்தகையின் கீழ் உள்ள செலுத்துமதி வாடகைகள் யாவும் சம்பந்தப்பட்ட குத்தகை நிபந்தனையின் அடிப்படையில் இலாமமோ அல்லது நட்டமோ நேர்மான அடிப்படையில் கணிக்கப்படும்.

## 2.10 பொருட்கள்

பொருட்கள் யாவும் குறைந்த பெறுமதி மற்றும் விற்பனை விலை பெறுமதி கழிப்பனவு நிறைவுற்ற விற்பனையில் குறிப்பிடப்படும். பெறுமதி கணக்கிடல் முதல் வருகை,முதல் வெளியேற்றம் (முவமுவெ) என்ற முறைமையில் கணிப்பிடப்படும்.

## 2.11 வியாபார மற்றும் ஏனைய வருமதிகள்

அதிக விற்பனைகள் சாதாரண கடன் கொள்கையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதுடன் வருமதிகளுக்கு வட்டி அறவிடுவதில்லை. சாதாரண கடன் நிபந்தனையுடன் கடன் நீடிப்பும் செய்யப்படும் தொலைவில் எப்பொழுதும் வருமதிகள் யாவும் அவ்வப்போது உள்ள வட்டி பெறுமதி முறைமையினை உபயோகித்து அளவிடப்பட்டது. ஒவ்வொரு அறிக்கை முடிவு காலத்திலும்,வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் தொகை யாவும் கொண்டுசெல்லும் மதிப்பிட்டை முடிவுசெய்ய எந்த நோக்கமும் அந்தத் தொகைகள் யாவும் அறவிடபபடவில்லை என்பதற்கு சான்று உள்ளனவா, அப்படி இல்லை என்றால், ஒரு வலிமை இழந்த நட்டம உடனடியாக இலாபம் அல்லது நட்டத்தை உண்டுபண்ணும்.

## 2.12 வியாபார செலுத்துமதிகள்

சாதாரண பொறுப்புக் கொள்கையின் அடிப்படையில் செலுத்தவேண்டிய வியாபார பொறுப்புக்கள் மற்றும் செலுத்தாத வட்டிகள்.வியாபார செலுத்துமதிகளை ஒரு சர்வதே நாணயத்தினை பரிமாற்ற விகிதத்தை உபயோகித்து ஸ்ரீலங்கன் ரூபாய்களாக(ரூபா.) பரிமாற்றி அறிக்கைத் திகதியில் மாற்றப்பட் சர்வதேச பணபரிமாற்றம் சம்பாத்தியமோ அல்லது நட்டமோ ஏனைய வருமாணம் அல்லது ஏனைய செலவீனங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 2.13 வங்கிக் கடன் மற்றும் வங்கிமேலதிகப்பற்றுக்கள்

வட்டிச் செலவீனங்கள் சிபார்வுசெய்யப்பட்ட அன்றுள்ள வட்டி முறையின் அடிப்படையில் நிதியியல் பெறுமதியில் உள்ளடக்கப்படும்.

**03. உடமை,யந்திரம் &சாதனங்கள்**

**03.1 ஒன்றிணைக்கப்பட்டது**

| | 01.01.2016 இல் மீதி | இவ் வருட மேலதிகம் | இவ் வருட விற்பனை | 31.12.2016 இல்மீதி |
|---|---|---|---|---|
| **பெறுமதி** | | | | |
| காணி & கட்டிடம் | 75,949,097 | - | - | 75,949,097 |
| இயந்திரம் & சாதனங்கள் | 197,339,442 | - | 20,000,000 | 177,339,442 |
| மோட்டார் வாகனங்கள் | 15,778,008 | - | 10,829,589 | 4,948,419 |
| தளபாடங்கள்,பொருத்து & சரியான | 12,519,279 | 143,236 | - | 12,662,515 |
| கருவிகள் & நடமாடும் சாதனங்கள் | 1,277,823 | 30,255 | - | 1,308,078 |
| கணக்கியல் மென்வலு | - | 73,440 | - | 73,440 |
| | **302,863,649** | **246,931** | **30,829,589** | **272,280,991** |

| | 01.01.2016 இல் மீதி | இவ் வருட கட்டணம் | இவ் வருட விற்பனை | 31.12.2016 இல் மீதி |
|---|---|---|---|---|
| **தேய்மாணம்** | | | | |
| காணி & கட்டிடம் | 4,768,586 | 1,513,476 | - | 6,282,062 |
| இயந்திரம் & சாதனங்கள் | 11,840,367 | 3,946,788 | - | 15,787,155 |
| மோட்டார் வாகனங்கள் | 13,133,063 | 224,637 | 10,784,892 | 2,572,808 |
| தளபாடங்கள்,பொருத்து & சரியான | 12,168,166 | 73,944 | - | 12,242,110 |
| கருவிகள் & நடமாடும் சாதனங்கள் | 1,233,426 | 37,875 | - | 1,271,301 |
| கணக்கியல் மென்வலு | - | 9,180 | - | 9,180 |
| | **43,143,608** | **5,805,900** | **10,784,892** | **38,164,616** |
| **தேறிய புத்தகப் பெறுமதி** | **259,720,041** | | | **234,116,375** |

**03.1 ஸ்ரீலங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனம்**

| | 01.01.2016 இல் மீதி | இவ் வருட மேலதிகம் | இவ் வருட விற்பனை | 31.12.2016 இல் மீதி |
|---|---|---|---|---|
| **பெறுமதி** | | | | |
| காணி & கட்டிடம் | 1,595,981 | - | - | 1,595,981 |
| மோட்டார் வாகனங்கள் | 15,392,480 | - | 10,829,589 | 4,562,891 |
| தளபாடங்கள்,பொருத்து & சரியான | 5,512,601 | 91,497 | - | 5,604,098 |
| கருவிகள் & நடமாடும் சாதனங்கள் | 1,194,398 | 30,255 | - | 1,224,653 |
| | **23,695,460** | **121,752** | **10,829,589** | **12,987,623** |

| | 01.01.2016 இல் மீதி | இவ் வருட கட்டணம் | இவ் வருட விற்பனை | 31.12.2016 இல் மீதி |
|---|---|---|---|---|
| **தேய்மாணம்** | | | | |
| காணி & கட்டிடம் | 307,399 | 26,412 | - | 333,811 |
| மோட்டார் வாகனங்கள் | 12,747,535 | 224,637 | 10,784,892 | 2,187,280 |
| தளபாடங்கள்,பொருத்து & சரியான | 5,317,743 | 73,944 | - | 5,391,687 |
| கருவிகள் & நடமாடும் சாதனங்கள் | 1,150,001 | 37,875 | - | 1,187,876 |
| | **19,522,678** | **362,868** | **10,784,892** | **9,100,654** |
| **தேறிய புத்தகப் பெறுமதி** | **4,172,782** | | | **3,886,969** |

287 காலி வீதி கொள்ளுப்பிட்டி கொழும்பு –03 இல் உள்ள காணி அடைமான முறி இல 2426 இன் கீழ் உள்ளது 2008 ம் ஆண்டு 25 ம் திகதி அடைமானம் மூலம் ரூபா.172,000,000 கடன் சலுகை பெறப்பட்டது.இவ் காணியின் பெறுமதியை 2013 இல் காணி மற்றும் கட்டிடத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது,

நாங்கள் கொள்ளுப்பிட்டியில் உள்ள காணியை மீள மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுத்ததுடன் அதனை நிதியில் அறிக்கையிலும் பதிவுசெய்துள்ளோம்.

2013 இல் பாலாவி புத்தளத்தில் உள்ள 221 ஏக்கா் வனநிலப்பகுதி அடையாளம் காணப்பட்டவை 2013 எமது நிதியியல் அறிக்கையில் இடம் பெற்றுள்ளது.

ஸ்ரீலங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனத்துக்கு உரித்தான காங்கேசன் துறையில் மொத்தமாக உள்ள 751 ஏக்கா் காணி எமது நிதியியல் அறிக்கையில் பதயப்படவில்லை. இதற்று வெளியே, திட்ட இல. ஏ2099 இன் கீழ் 231 ஏக்கா் அரச காணியும் எஞ்சிய 1964 இன் பிற்பாடு முன்னைய உரிமையாளர்களுக்கு நட்டஈடு வழங்கப்பட்டதால் உரிமையாக்கப்பட்ட திட்ட இல.ஏ1557,ஏ1484,ஏ1464,ஏ1562 மற்றும் ஆரம்பதிட்ட இல.ஏ2438 14.12.1964இலங்கை அரசாங்க வா்த்தமாணி (பந்து460) அக்கியுசிற்றசன சட்ட காணியும்

தென்மாகாணம்,காலி மாவட்டத்தில் ரெல்பே பற்றில் அமைந்துள்ள ஆறு ஏக்கா் பரப்பைக் கொண்டிருந்த எங்களுக்கு உரிமையான காணி ஆனால் பிரதேச செயலாளரால் இந்தக் காணியில் சுனாமி வீடுகள் நிா்மாணிக்கப்பட்டது. நாங்கள் இந்தக் காணிக்குரிய நட்டஈட்டைப் பெறுவதற்கு வேண்டுகோள்விடுத்துள்ளோம்.

*தொட………………..*

03.1 ஊடமை,யந்திரம் & சாதனங்கள் - துணைநிலை கம்பனி

| பெறுமதி | 01.01.2016இல் மீதி | இவ் வருட மேலதிகங்கள் | இவ் வருட விற்பனை | 31.12.2016 இல் மீதி |
|---|---|---|---|---|
| காணி & கட்டிடம் | 74,353,116 | - | - | 74,353,116 |
| யுந்திரம் & இயந்திரம் | 197,339,442 | - | 20,000,000 | 177,339,442 |
| மோட்டார் வாகனங்கள் | 385,528 | - | - | 385,528 |
| தளபாடங்கள,பொருத்துக்கள் & நிலையான | 7,006,678 | 51,739 | - | 7,058,417 |
| கருவிகள் & அசைவு சாதனங்கள் | 83,425 | - | - | 83,425 |
| கணக்கியல் மென்வலு | - | 73,440 | - | 73,440 |
| | **279,168,189** | **125,179** | **20,000,000** | **259,293,368** |

| தேய்மாணம் | 01-01-2016 மீதி | இவ்வருடத்தில் கணிக்கப்பட்டது | இவ் வருட விற்பனை | 31-12-2016 இல் மீதி |
|---|---|---|---|---|
| காணி & கட்டிடம் | 4,461,187 | 1,487,064 | - | 5,948,251 |
| யுந்திரம் & இயந்திரம் | 11,840,367 | 3,946,788 | - | 15,787,155 |
| மோட்டார் வாகனங்கள் | 385,528 | - | - | 385,528 |
| தளபாடங்கள,பொருத்துக்கள் & நிலையான | 6,850,423 | - | - | 6,850,423 |
| கருவிகள் & அசைவு சாதனங்கள் | 83,425 | - | - | 83,425 |
| கணக்கியல் மென்வலு | - | 9,180 | - | 9,180 |
| | **23,620,930** | **5,443,032** | **-** | **29,063,962** |
| **தேறிய புத்தகப் பெறுமதி** | **255,547,259** | | | **230,229,406** |

| 04. உடமைகளில் முதலீடு | 2016 ஸ்ரீலசீகூ ரூபா.. | 2015 ஸ்ரீலசீகூ ரூபா.. | 2016 இணைந்த. ரூபா.. | 2015 இணைந்த . ரூபா.. | 2016 துணைநிலை கம்பனி. ரூபா.. |
|---|---|---|---|---|---|
| கொழும்பு 03 உள்ள காணி | 712,500,000 | 712,500,000 | 712,500,000 | 712,500,000 | - |
| காலியில் உள்ள காணி | 61,200,000 | 61,200,000 | 61,200,000 | 61,200,000 | - |
| | **773,700,000** | **773,700,000** | **773,700,000** | **773,700,000** | **-** |

ஸ்ரீலசீகூ க்கு உரிமையாய் இருக்கும் காணியின் பெறுமதியை ஆதன முதலீட்டில் வகைப்படுத்தி கணக்கிடப்பட்டு ''சந்தைப் பெறுமதி முமைமயில்'' இலங்கை கணக்கீட்டு நியமம் 40 ஆல் —முதலீட்டு உரிமையான்மை வேண்டப்பட்டது. 2013 ஒக்டோபர் 2 ம்திகதி இறுதியாக விலை மதிப்பிடப்பட்டு அறிக்கை பிரதம மதிப்பீட்டாளர், மதிப்பீட்டுத் திணைக்களம்,கொழும்பு ஆல் வழங்கப்பட்டது.

| 05. நீண்டகால வருமதிகள் | | | | | |
|---|---|---|---|---|---|
| குறுகியகால & நீண்டகாலக் கடன் ல.சீ.க உருவாக்குதல் ல.சீ. க விமிட்டெட் | 424,169,977 | 424,169,977 | 424,169,977 | - | - |
| இரண்டு தொழிற்சாலைகளும் மூடுவதற்கு முன்னரான உள்ளக பரிமாற்றங்கள் ல சீ லி மற்றும் ஸ்ரீ சீ கூ | 333,053,906 | 333,053,906 | 333,053,906 | - | - |
| ஐயக்கடன் வருமதிகளுக்கான ஒதுக்கம். | (757,223,883) | - | (757,223,883) | - | - |
| | **-** | **757,223,883** | **-** | **-** | **-** |

## ஸ்ரீலங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனம்

### 2016 டிசெம்பர் 31 முடிவடைந்த ஆண்டுக்கான ஒன்றிணைந்த நிதியில் அறிக்கையின் கணக்கியல்கொள்கை மற்றும் விளக்கமான குறிப்புக்கள்

ரூபா.

| | | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|---|
| | | ஸ்ரீலசீகூ | ஸ்ரீலசீகூ | ஒன்றளை | ஒன்றளை | துணைநிலைகம் |
| **06.** | **முதலீடுகள்** | | | | | |
| | திறைசேரி முறிகள் | 5,162,359 | 35,469,020 | 5,162,359 | 35,469,020 | - |
| | ***துணைநிலை & ஏனையவைகளில் முதலீடு*** | | | | | |
| | துணைநிலை– லங்கா சீமெந் பிஎல்சி | 617,662,779 | 856,058,939 | - | - | - |
| | லபார்ஜி சீமெந் கொ(தனியார்) லிமிட்டெட் | 6,400,000 | 6,400,000 | 6,400,000 | 6,400,000 | - |
| | | **629,225,138** | **897,927,959** | **11,562,359** | **41,869,020** | **-** |
| **07.** | **பொருட்கள்** | | | | | |
| | மூலப்பொருட்கள் மற்றும் நடைபெற்று கொண்டிருக்கும் கொங்கிறீற் உறபத்தி இருப்பு | 238,256 | 995,914 | 238,256 | 995,914 | - |
| | முடிவுற்ற கொங்கிறீற் கம்பங்களின் இருப்புக்கள் முதலியன | 2,861,422 | 4,522,162 | 2,861,422 | 4,522,162 | - |
| | சீமெந்தின் இருப்பு | - | 3,075,850 | 3,188,671 | 7,547,249 | 3,188,671 |
